www.Padasalai.Net www.CBSEtips.in

புதிய பதிப்பு

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

# தமிழ் அமுது 6



முப்பருவ கையேடு

பருவம் -1 பருவம் -2 பருவம் -3

**நூலின் கட்டமைப்பு:**

பாடநூலில் இருப்பது போன்றே கற்றல் நோக்கங்கள், பாடலின் பொருள், நுழையும் முன், நூல்வெளி, மனவரைபடம், பொருள் கூறுக, சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், குறுவினா, சிறுவினா, நெடுவினா, சிந்தனை வினா, விரிவானம், கூடுதல் வினாக்கள், தெரிந்து தெளிவோம், கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கட்டுரை, கடிதம், அலகுத் தேர்வுகள், மனப்பாடப் பாடல்கள்.

இலக்கு 100/100

பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in

பெங்குயின்

# தமிழ் அமுது

# 6

“ புதிய பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது ”

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை ரூ.219/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT :8925612359

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழாசிரியப் பெருமக்களே!

நாங்கள் 6 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின் படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்காலவாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சிலவினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையானஅழகு,தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் பகுதியும் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலைநிறுத்துங்கள். அரசுப்பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in

## பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| **மனப்பாடப் பாடல்கள்** | | | **1** |
| **பருவம் ஒன்று** | | | |
| 1 | **மொழி** | இன்பத்தமிழ் | 6 |
| | தமிழ்த்தேன் | தமிழ்க்கும்மி | 12 |
| | | வளர்தமிழ் | 17 |
| | | கனவு பலித்தது | 25 |
| | | தமிழ் எழுத்துகளின் வகை தொகை | 28 |
| | | அலகுத் தேர்வு | 37 |
| 2 | இயற்கை | சிலப்பதிகாரம் | 41 |
| | | காணி நிலம் | 46 |
| | | சிறகின் ஓசை | 51 |
| | | கிழவனும் கடலும் | 57 |
| | | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 60 |
| | | திருக்குறள் | 63 |
| | | அலகுத் தேர்வு | 71 |
| 3 | அறிவியல் தொழில்நுட்பம் | அறிவியல்ஆத்திசூடி | 75 |
| | | அறிவிலால் ஆள்வோம் | 79 |
| | | கணியனின் நண்பன் | 83 |
| | | ஒளி பிறந்தது | 87 |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 90 |
| | | அலகுத் தேர்வு | 97 |
| **பருவம் இரண்டு** | | | |
| 4 | **கல்வி** | மூதுரை | 101 |
| | கண்ணெனத் தகும் | துன்பம் வெல்லும் கல்வி | 105 |
| | | கல்விக்கண் திறந்தவர் | 110 |
| | | நூலகம் நோக்கி | 116 |
| | | இன எழுத்துகள் | 119 |
| | | அலகுத் தேர்வு | 128 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 5 | **நாகரிகம், பண்பாடு** | ஆசாரக்கோவை | 132 |
| | பாடறிந்த ஒழுகுதல் | கண்மணியே கண்ணுறங்கு | 138 |
| | | தமிழர் பெருவிழா | 143 |
| | | மனம் கவரும் மாமல்லபுரம் | 149 |
| | | மயங்கொலிகள் | 153 |
| | | திருக்குறள் | 161 |
| | | அலகுத் தேர்வு | 165 |
| 6 | **தொழில், வணிகம்** | நானிலம் படைத்தவன் | 169 |
| | கூடித் தொழில் செய் | கடலோடு விளையாடு | 174 |
| | | வளரும் வணிகம் | 180 |
| | | உழைப்பே மூலதனம் | 185 |
| | | சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் | 187 |
| | | அலகுத் தேர்வு | 194 |
| **பருவம் மூன்று** | | | |
| 7 | **நாடு, சமூகம், அரசு, நிருவாகம்** | பாரதம் அன்றைய நாற்றங்கால் | 198 |
| | புதுமைகள் செய்யும் தேசமிது | தமிழ்நாட்டில் காந்தி | 204 |
| | | வேலுநாச்சியார் | 208 |
| | | நால்வகைச் சொற்கள் | 210 |
| | | அலகுத் தேர்வு | 220 |
| 8 | **அறம், தத்துவம், சிந்தனை** | பராபரக் கண்ணி | 224 |
| | எல்லாரும் இன்புற | நீங்கள் நல்லவர் | 228 |
| | | பசிப்பிணி போக்கிய பாவை | 233 |
| | | பாதம் | 237 |
| | | பெயர்ச்சொல் | 240 |
| | | திருக்குறள் | 250 |
| | | அலகுத் தேர்வு | 252 |
| 9 | **மனிதம், ஆளுமை** | ஆசிய ஜோதி | 256 |
| | இன்னுயிர் காப்போம் | மனித நேயம் | 263 |
| | | முடிவில் ஒரு தொடக்கம் | 268 |
| | | அணி இலக்கணம் | 271 |
| | | அலகுத் தேர்வு | 279 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# மனப்பாடப்பகுதி

## பருவம் 1

### இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !

**- பாரதிதாசன்**

### சிலப்பதிகாரம்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

**- இளங்கோவடிகள்**

### காணி நிலம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்குத்
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்குக்
கேணி அருகினிலே - தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும்.

**- பாரதியார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## திருக்குறள்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

- திருவள்ளுவர்

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# பருவம் 2

## மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையான் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

**- ஔவையார்**

## திருக்குறள்

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்

**- திருவள்ளுவர்**

## கடலோடு விளையாடு

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல்போர்வை - ஜலசா
காயும்கதிர்ச் சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும்வீடு ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஜலசா
முழுநிலவே கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கும் நீச்சல் யோகம் - ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா
துணிவோடு தொழில் செய்வோம் - ஜலசா



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## பருவம் 3

### பாரதம் அன்றைய நாற்றங்கால்

புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம் !
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)

அன்னை நாட்டின் அமுத சுரபியல்
அன்னிய நாடுகள் பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக
புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது !

**- தாராபாரதி**

### பராபரக் கண்ணி

1. தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
   செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பாராபரமே !
2. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
   அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே !

**- தாயுமானவர்**

### திருக்குறள்

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற
2. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
   நன்னயம் செய்து விடல்
3. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

**- திருவள்ளுவர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் ஒன்று

# தமிழ்த்தேன்



**கற்றல் நோக்கங்கள்**

- செய்யுளின் பொருளைச் சொந்த நடையில் கூறுதல் - எழுதுதல்.
- தமிழ் மொழியின் இனிமையை உணர்ந்து போற்றுதல்.
- தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுதல்.
- தன்னம்பிக்கையுடன் தனக்கான இலக்குகளை உருவாக்குதல்.
- எழுத்துகளின் வகை, தொகைகளை அறிதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in




இயல் ஒன்று

கவிதைப்பேழை


# இன்பத்தமிழ்

6ZKN6M

## மனவரைபடம்




## நுழையும் முன்




நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. பாரதிதாசன் தமிழைப் பலவிதங்களில் போற்றுகிறார். கண்ணே! மணியே! என்று குழந்தையைக் கொஞ்சுவதும் உண்டு. அதுபோல அவர் நம் செந்ததமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்வதைக் காண்போம்.

தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!*

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!*

தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

## பாடலின் பொருள்

- அமுதம் மிக இனிமையானது. அது போலவே தமிழும் இனிமையானது. அத்தகைய இன்பம் தரும் தமிழ் எங்கள் உயிருக்கும் இணையானது.
- தமிழுக்கு **நிலவென்றும்** பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.
- தமிழுக்கு **மணம்** என்றும் பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.
- தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான **பால்** போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.
- தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய **வானம்** போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.
- தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க **வாள்** ஆகும்.

## நூல்வெளி



பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார். இவரைப் பாவேந்தர் என்றும் போற்றுவர்.



## சொல்லின் பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிருமித்த | - | உருவாக்கிய | விளைவு | - | விளைச்சல் |
| சமூகம் | - | மக்கள் குழு | அசதி | - | சோர்வு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.**

**2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

அமுதா : வணக்கம், ராதா

ராதா : வணக்கம் அமுதா

அமுதா : நாம் கற்ற இன்பத்தமிழ் பாடப்பகுதியில் அமுது, நிலவு, மணம் என தமிழை அழைப்பதாக கூறப்பட்டுள்ளது. அது எவ்வாறு பொருந்தும்.

ராதா : அமுது என்பது சாவா மருந்தாகும். தமிழ் அழியாமல் உலகில் நிலைத்து நிற்கும் மொழியாகும். அதனால் தமிழ் அமுது என்று அழைக்கிறார்கள். இதேபோன்று நிலவு என்பது குளிர்ச்சியான நல்ல ஒளிதரக்கூடியதாகும். ஆகையால், நிலவு போன்று இனிமையான மொழியாக ஒளிர்கின்றது. மணம் என்பது நறுமணம். எனவே, தமிழ்மொழியானது உலகம் முழுவதும் தமிழ் மணத்தைப் பரப்பி வருகிறது. இத்தயை சிறப்புகளை உடையது.

அமுதா : அருமையான தகவல். மிக்க நன்றி.

**3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

- அன்னைத்தமிழ்
- ஒண்டமிழ்
- இன்பத்தமிழ்
- வண்டமிழ்
- முத்தமிழ்
- செந்தமிழ்
- இயற்தமிழ்
- தேன்தமிழ்
- இசைத்தமிழ்
- அமுதத்தமிழ்
- நாடகத்தமிழ்
- கன்னித்தமிழ்

**4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க**

(எ.கா) தமிழே உயிரே வணக்கம்
தாய்பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும் - கவிஞர். காசி ஆனந்தன்

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. ஏற்றத் தாழ்வற்ற ________ அமைய வேண்டும்

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ________ ஆக இருக்கும்
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி
3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று
4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்
5. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
   இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று
6. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்
   இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**விடைகள்**

1. விடை : (அ) சமூகம்
2. விடை : (ஈ) அசதி
3. விடை : (ஆ) நிலவென்று
4. விடை : (ஆ) தமிழெங்கள்
5. விடை : (ஆ) அமுது + என்று
6. விடை : (அ) செம்மை + பயிர்

## ★ இன்பத்தமிழ் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக ★

1. விளைவுக்கு - (அ) பால்
2. அறிவுக்கு - (ஆ) வேல்
3. இளமைக்கு - (இ) நீர்
4. புலவருக்கு - (ஈ) தோள்

**விடை:** 1 - (இ) 2 - (ஈ) 3 - (அ) 4 - (ஆ)

## ★ ஒத்த ஓசையில் முடியும் (இயைபுச்) சொற்களை எடுத்து எழுதுக ★

(எ.கா) பேர் - நேர்

கால் - பால் தேள் - வாள்

வான் - தேன் தாய் - சேய்

பேர் - ஊர் நாள் - தாள்

## ★ குறு வினா ★

**1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**

* அமுதம் * நிலவு * மணம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

- ✶ நாங்கள் தமிழை உயிரோடு ஒப்பிடுவோம்.
- ✶ ஏனென்றால் உயிர் உள்ளவரைதான் உடலுக்கு மதிப்பு. அது போல தமிழ் உள்ளவரைதான் தமிழனுக்கு மதிப்பு.

## ★ சிறுவினா ★

**1. இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

"தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

**2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

- ✶ "நீரின்றி அமையாது உலகு" என்பது வள்ளுவர் வாக்கு. நல்ல விளைச்சலைப் பெற நீர் அவசியம்.
- ✶ உலக உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கு ஆதாரமாக விளங்குவது நீராகும்.
- ✶ இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது. இதுவே சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு ஆகும்.

## ★ சிந்தனை வினா ★

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது? உங்கள் கருத்தைக் கூறுக.**

- ✶ வேல் ஒரு கூர்மையான ஆயுதமாகும்.
- ✶ பண்டைக் காலத்தில் போர் செய்யவும், வேட்டையாடவும் இக்கருவி பயன்பட்டது.
- ✶ நான்கு படைகளுள் ஒன்று வேற்படையாகும்.
- ✶ "வாளின் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது" என்பர். அதனாலே, புலவர்கள் எழுத்தாணியைக் கொண்டு எழுதும் தமிழ்ப் பாடல்கள் மனித உள்ளங்களை ஊடுருவிப் பார்க்கும் தன்மை கொண்டது.
- ✶ அதனால்தான் கவிஞன் வேலையும் தமிழையும் ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

## கூடுதல் வினாக்கள்

### 1. நிரப்புக

1. பாரதிதாசனின் இயற்பெயர் ____________.
   விடை : சுப்புரத்தினம்
2. புரட்சிக்கவி பாவேந்தர் என்ற சிறப்புப் பெயரை உடையவர் ____________.
   விடை : பாரதிதாசன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



3. பாரதியாரின் கவிதைகள் மேல் பற்றுகொண்டு தம் பெயரை மாற்றிக் கொண்டவர் ___________.

விடை : பாரதிதாசன்

## II. சிறுவினா

**1. பாரதிதாசன் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் |
| இயற்றியவர் | : | சுப்புரத்தினம் |
| பெற்றோர் | : | கனகசபை - இலக்குமி அம்மையார் |
| பிறப்பு | : | 29.04.1891 |
| சிறப்புப் பெயர் | : | பாவேந்தர், புரட்சிக்கவி |
| இயற்றிய படைப்புகள் | : | குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிறப்பு, பாரதிதாசன் கவிதைகள். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in




இயல் ஒன்று

கவிதைப்பேழை

# தமிழ்க்கும்மி

78UB2F

## மனவரைபடம்




## நுழையும் முன்




கூட்டமாகக்கூடிக் கும்மியடித்துப் பாடி ஆடுவது மகிழ்ச்சியான அனுபவம். கும்மியில் தமிழைப் போற்றிப்பாடி ஆடுவது பெரும் மகிழ்ச்சி தருவதாகும். வாருங்கள்! தமிழின் பெருமையை வாயாரப் பேசலாம். காதாரக் கேட்கலாம். இசையோடு பாடலாம். கும்மி கொட்டி ஆடலாம்.

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி - நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

ஊழி பலநூறு கண்டதுவாம், அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் - பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பொய் அகற்றும்; உள்ளப் பூட்டறுக்கும் - அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் - உயிர்
மெய்புகட்டும்; அறமேன்மை கிட்டும் இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!

- பெருஞ்சித்திரனார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## பாடலின் பொருள்

இளம்பெண்களே! தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

பொய்மை அகற்றும் மொழி, தமிழ். அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி; உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி.

## நூல்வெளி





பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம். இவர் பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார். தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர். இப்பாடல் கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

## சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆழிப்பெருக்கு | - | கடல் கோள் | ஊழி | - | நீண்டதொரு காலப்பகுதி |
| மேதினி | - | உலகம் | உள்ளப்பூட்டு | - | உள்ளத்தின் அறியாமை |

## கற்பவை கற்றபின்

1. **தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.**
2. **பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.**

வான்தோன்றி, வளி தோன்றி, நெருப்புத் தோன்றி
　மண் தோன்றி, மழை தோன்றி, மலைகள் தோன்றி
ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உணர்வு தோன்றி
　ஒளி தோன்றி, ஒலி தோன்றி, வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
　செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!

- வாணிதாசன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. தாய் மொழியில் படித்தால் ________ அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ________ சுருங்கிவிட்டது.
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
3. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்
4. பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________.
   அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்
   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்
5. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது________.
   அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும்
   இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்
6. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________.
   அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

**விடைகள்**

1. விடை : (ஆ) மேன்மை
2. விடை : (அ) மேதினி
3. விடை : (ஈ) செம்மை + தமிழ்
4. விடை : (அ) பொய் + அகற்றும்
5. விடை : (அ) பாட்டிருக்கும்
6. விடை : (அ) எட்டுத்திசை

### ★ நயம் உணர்ந்து எழுதுக ★

1. **பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.**
   கொட்டுங்குடி - கோதையரே
   எட்டு - எட்டிடவே
   ஊழி - ஊற்றெனும்
   ஆழி - அழியாமல்
   மெய் - மேதினி
2. **பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**
   கொட்டுங்கடி எட்டுத் - எட்டிடவே
   எட்டுத்திசையிலும் ஆழிப் - அழியாமலே



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



ஊழி பலதூறு ஆழி
பொய் அகற்றும் மெய் புகட்டும்

## ★ குறு வினா ★

**1. தமிழ்மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

✶ தமிழ், பொய்யை அகற்றும் மொழி
✶ மனதின் அறியாமையை நீக்கும் மொழி
✶ இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி
✶ உயிர்போன்ற உண்மையை ஊட்டும் மொழி
✶ உயர்ந்த அறத்தைத் தரும் மொழி
✶ இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி, நம் தமிழ்மொழி.

**2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்ற கவிஞர் கூறுகிறார்?**

✶ செந்தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

## ★ சிறுவினா ★

**1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**

✶ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இலக்கிய இலக்கணங்களைப் பெற்ற பழமையான மொழி நம் தமிழ்மொழி
✶ "காலவெள்ளத்தை எதிர்க்கும் தமிழ் என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினராம் எங்கள் தாய்" என்று தமிழின் தொன்மையைப் பாரதியார் கூறுகிறார்.
✶ அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி தமிழ்மொழி.
✶ சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள்வரை பல இலக்கியங்களைக் கண்டுள்ளது தம் தமிழ்மொழி.
✶ பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி நம் தமிழ் மொழி என்று கவிஞர் கூறுகிறார்.

**2. தமிழ்க்கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.**

✶ தமிழ்மொழியின் சிறப்பினை அறியமுடிகிறது.
✶ தமிழ்மொழி பல அறிவியல் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றது.
✶ இயற்கைச் சீற்றத்தையும் பல இனங்களின் எதிர்ப்பையும் மீறி அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.
✶ தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவவேண்டும்.
✶ பொய்யை அகற்றும்; உயர்ந்த அறத்தைத் தரும்; இன்பம் தரும்; பாடல்களைத்தரும்; உண்மையை ஊட்டும்; உலகம் சிறந்து வாழ வழிகளைக் காட்டும் மொழி நம் தமிழ் மொழியாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## ★ சிந்தனை வினா ★

**தமிழ்மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?**

- ✶ ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பல இலக்கியங்களில், குறிப்பாக சங்க இலக்கியங்களில் அக வாழ்க்கை, புறவாழ்க்கை பற்றிய கருத்துகளைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள் புலவர்கள்.
- ✶ சங்க இலக்கியங்களில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? எவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது என்று வாழ்வியலின் நெறிமுறைகளை எடுத்துக் கூறுவதால் தமிழ்மொழி அறியாமையை அகற்றும் என்பதில் ஐயமில்லை.

## கூடுதல் வினாக்கள்

## I. நிரப்புக

1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ___________.
   விடை : மாணிக்கம்
2. ‘பாவலரேறு’ என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் ___________.
   விடை : பெருஞ்சித்திரனார்
3. பொய்யாமை அகற்றும் மொழி ___________.
   விடை : தமிழ்மொழி
4. மேதினி என்னும் சொல்லின் பொருள் ___________.
   விடை : உலகம்

## II. குறு வினா

**1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் இயற்றியுள்ள நூல்கள் யாவை?**

* கனிச்சாறு * கொய்யாக்கனி * பாவியக்கொத்து * நூறாசிரியம்

**2. பாவலரேறு பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் யாவை?**

- ✶ தென்மொழி
- ✶ தமிழ்ச்சிட்டு
- ✶ தமிழ் நிலம்

## III. சிறுவினா

**1. பெருஞ்சித்திரனார் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெருஞ்சித்திரனார் |
| இயற்றியவர் | : | மாணிக்கம் |
| சிறப்புப் பெயர் | : | பாவலரேறு |
| இயற்றிய நூல்கள் | : | கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் |
| நடத்திய இதழ்கள் | : | தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



உரைநடை உலகம்

இயல் ஒன்று

# வளர்தமிழ்

79D35Q

## மனவரைபடம்

**வளர் தமிழ்**
- மூத்த மொழி
- எளிய மொழி
  - சீர்மை மொழி
- வளமை மொழி
  - வளர் மொழி
- புதுமை மொழி
- அறிவியல் தொழில்நுட்ப மொழி

## நுழையும் முன்




மூத்த தமிழ்மொழி என்றும் இளமையானது; எளிமையானது; இனிமையானது; வளமையானது; காலத்திற்கேற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்வது;நினைக்கும்போதே நெஞ்சில் இனிப்பது; நம் வாழ்வைச் செழிக்கச் செய்வது; உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழியின் சிறப்புகளை அறியலாம் வாருங்கள்.

## தெரிந்து தெளிவோம்

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே ___ தொல் : 386 |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் - வஞ்சி : 165 |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ...தமிழன் கண்டாய் - திருத்தாண்டகம் : 23. |

**தாவர இலைப் பெயர்கள்**

| | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



| | |
|---|---|
| நெல், வரகு | தாள் |
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு (பாக்கு) | கூந்தல் |

**தமிழ் எண்களை அறிவோம்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |

**இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் சில தமிழ்ச்சொற்கள்**

| வ.எண் | சொல் | இடம்பெற்ற நூல் |
|---|---|---|
| 1 | வேளாண்மை | கலித்தொகை 101, திருக்குறள் 81 |
| 2 | உழவர் | நற்றிணை 4 |
| 3 | பாம்பு | குறுந்தொகை - 239 |
| 4 | வெள்ளம் | பதிற்றுப்பத்து - 15 |
| 5 | முதலை | குறுந்தொகை - 324 |
| 6 | கோடை | அகநானூறு - 42 |
| 7 | உலகம் | தொல்காப்பியம், கிளவியாக்கம் - 56 திருமுருகாற்றுபடை-1 |
| 8 | மருந்து | அகநானூறு - 147, திருக்குறள் 952 |
| 9 | ஊர் | தொல்காப்பியம், அகத்திணையியல் - 41 |
| 10 | அன்பு | தொல்காப்பியம், களவியல் 110, திருக்குறள் 84 |
| 11 | உயிர் | தொல்காப்பியம், கிளவியாக்கம் - 56, திருக்குறள் 955 |
| 12 | மகிழ்ச்சி | தொல்காப்பியம், கற்பியல் - 142, திருக்குறள் - 531 |
| 13 | மீன் | குறுந்தொகை 54 |
| 14 | புகழ் | தொல்காப்பியம், வேற்றுமையியல் 71 |
| 15 | அரசு | திருக்குறள் 554 |
| 16 | செய் | குறுந்தொகை 72 |
| 17 | செல் | தொல்காப்பியம், 75 புறத்திணையியல் |
| 18 | பார் | பெரும்பாணாற்றுப்படை, 435 |
| 19 | ஒழி | தொல்காப்பியம், கிளவியாக்கம் 48 |
| 20 | முடி | தொல்காப்பியம், வினையியல் 206 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

**மன்னன்** : கண்ணா! வணக்கம்

**கண்ணன்** : வணக்கம் மன்னா!

**மன்னன்** : மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்று கூறுகிறார்கள். அது எப்படி கண்ணா !சிறிது விளக்கமாகக் கூறு.

**கண்ணன்** : கூறுகிறேன் கேள் ......

மூவேந்தர்களின் ஆட்சியின்போது பல புலவர்கள் சங்கம் அமைத்து சங்க இலக்கியங்களை இயற்றினர். களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தமிழ் வளர்ச்சியடைந்து சங்க மருவிய இலக்கியமாக உருவெடுத்தது. பின் பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம் உருவெடுத்தது. பின்னர் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சிற்றிலக்கியங்கள் உருவெடுத்து தன்னை மாற்றிக்கொண்டது. 20 ஆம் நூற்றாண்டில் அறிவியல் கருவிகள் வளர்ச்சியால் பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் தமிழ்மொழியை எளிமைப்படுத்தியுள்ளனர். அயல் நாட்டவரின் ஆட்சியில் உரைநடை, கவிதை, கதை, நாடகம், கட்டுரை முதலியன மாற்று வடிவம் பெற்றுள்ளது. தம்மைப் புதுப்பித்துக் கொண்டுள்ளது. தற்பொழுது கூட கணினியில் தமிழ் இணையம் மூலம் தமிழ்மொழி காலந்தோறும் மாறிப் புதுமைகள் படைத்து வருகின்றது என்பதை நாம் அறிய முடிகிறது.

**மன்னன்** : அருமை ! அருமை !என்னுடைய ஐயத்தைப் போக்கி விட்டாய். மிக்க நன்றி !

**2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத்தர விரும்பும் பத்துத்தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

- ✶ வணக்கம்
- ✶ நன்றி
- ✶ வாழ்க
- ✶ அம்மா
- ✶ அப்பா
- ✶ அன்பாக இருங்கள்
- ✶ ஒற்றுமையே வலிமை
- ✶ நட்புடன் வாழ்க
- ✶ பெரியோரை மதிக்கவும்
- ✶ மகிழ்ச்சி

**3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம்**

(எ.கா) பிறந்த நாள் வாழ்த்து

நீண்ட நீண்ட காலம் - நீ, நீடு வாழ வேண்டும் !

வானம் தீண்டும் தூரம் - நீ, வளர்ந்து வாழ வேண்டும் !

அன்பு வேண்டும் ! அறிவு வேண்டும் ! பண்பு வேண்டும் ! பரிவு வேண்டும் !



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



எட்டுத்திக்கும் புகழ வேண்டும். எடுத்துக்காட்டு ஆக வேண்டும் !
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத் தாளில் எழுதவேண்டும்
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம் !
பிறந்தநாள் வாழ்த்துகள் ! பிறந்தநாள் வாழ்த்துகள் !
இனிய பிறந்ததாள் வாழ்த்துகள் ! **- கவிஞர் அறிவுமதி**

**சுதந்திரப் பொங்கல் வாழ்த்து**

"அடிமை விலங்குகள் அகன்றன இனிமேல்
கொடுமை பிறர்பால் கூறுதற்கு இல்லை
திடமுடன் சத்தியத் தீயினை ஈட்டி
மடமை மதவெறி மமதையை எரித்துப்
பொய்யும் மோகமும் புலையும் பொசுங்க
வையம் முழுவதும் வாழ்ந்திடந் துணிந்திங்கு
அன்பெனும் பாலை அடுப்பகத்தே ஏற்றித்
துன்பெனும் துர்நீர் சுண்டித் தொலைந்திடக்
காய்ச்சித் திரட்டிய கருணைப் பொங்கலை
பொங்கலோ பொங்கல் தைப் பொங்கல் என்று
கொண்டாடி மகிழ்வோம் வாழ்வில் என்றும்"

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. 'தென்மை' என்னும் சொல்லின் பொருள் ________
   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
2. 'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ________
   அ) இடன் + புறம் ஆ) இடை + புறம் இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம்
3. 'சீரிளமை' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ________
   அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை
4. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்பதிகாரம் ஈ) சில பதிகாரம்
5. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ)கணினிதமிழ் ஆ)கணினித்தமிழ் இ) கணினிதமிழ் ஈ) வாணிதாசன்
6. 'தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியவர் ________
   அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்
7. 'மா' என்னும் சொல்லின் பொருள் ________
   அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

**விடைகள்**

1. விடை : (ஆ) பழமை
2. விடை : (ஆ) இடம்+ புறம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



3. விடை : (அ) சீர்மை+ இளமை
4. விடை : (ஆ) சிலப்பதிகாரம்
5. விடை : (ஆ) கணினித்தமிழ்
6. விடை : (ஆ) பாரதியார்
7. விடை : (இ) விலங்கு

## ★ கோடிட்ட இடத்தை நிரப்புக ★

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ________
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ________
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ______ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

**விடைகள்**

1. மொழி
2. தொல்காப்பியம்
3. எண்களின்

## ★ சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக ★

1. தனிச்சிறப்பு : நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.
2. நாள்தோறும் : திருக்குறளை நாள்தோறும் படிக்க வேண்டும்.

## ★ குறு வினா ★

**1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?**

- ✶ தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
- ✶ ஆனால், இலக்கியங்கள் தோன்றிய பிறகுதான் அதற்குரிய இலக்கண நூல்கள் தோன்றியிருக்க வேண்டும்.
- ✶ எனவே தான், இதனைக் கொண்டு தமிழ் மிகவும் தொன்மையான மூத்தமொழி என்பதை நாம் உணரலாம்.

**2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

- ✶ சிலப்பதிகாரம்
- ✶ மணிமேகலை
- ✶ சீவக சிந்தாமணி
- ✶ வளையாபதி
- ✶ குண்டலகேசி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## ★ சிறுவினா ★

**1. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?**

**அஃறிணை**

- ✶ திணை இரண்டு. அவை, உயர்திணை, அஃறிணை.
- ✶ உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என்றுதான் அமைய வேண்டும்.
- ✶ தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயரிட்டனர்.

**பாகற்காய்**

- ✶ பாகற்காய் கசப்புத் தன்மையுடையது.
- ✶ கசப்புக்காய் என்று கூறாமல் (பாகு + அல் + காய்) இனிப்பு (பாகு), அல்லாத காய் பாகற்காய் எனக் கூறுகின்றனர்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

- ✶ தமிழ் இலக்கியம் பலவும் செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் ஆகிய இனிய ஓசைகளால் பாடப்படுகின்றன.
- ✶ மோனை, எதுகை, இயைபு போன்ற சொல் நயங்களாலும் பாடப்படுகின்றன.
- ✶ மேலும், செய்யுளில் இடம்பெற்றுள்ள சொற்களுக்கான பொருளும் இனிமையாக அமைந்துள்ளதால் தமிழை இனியமொழி என்று அழைக்கிறோம்.

**3. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

- ✶ தமிழ்மொழி பேசவும் எழுதவும் படிக்கவும் எளிமையாகவும் காலத்திற்கேற்ப தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்ட மொழி.
- ✶ உலக மொழிகளுள் செம்மைமிக்க மொழியாக விளங்குகிறது.
- ✶ இலக்கண, இலக்கிய வளம் பெற்றுத் திகழும் மொழியாக அமைந்துள்ளது.
- ✶ குறிப்பாக, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாக்கி வருகின்றன.

## ★ சிந்தனை வினா ★

**1. தமிழ்மொழி பழக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

- ✶ தமிழ்மொழி பேசவும், எழுதவும், பழக்கவும் உகந்த மொழி
- ✶ உயிரும் மெய்யும் சேர்ந்து தோன்றுபவையே உயிர்மெய் ஒலிகளாகும்.
- ✶ உயிர், மெய் எழுத்துகளின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளின் ஒலிப்புமுறையை எளிதாக அறியலாம்.
- ✶ எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழக்கூடும்.
- ✶ தமிழ்மொழியை எழுதும் முறை மிகவும் எளிது.
- ✶ தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமையும். ஒரு சில எழுத்துகள் இடஞ்சுழியாக அமையும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. தமிழ்மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

✶ முத்தமிழ் மொழியானது எளிமையானது, இனிமையானது, வளிமையானது, இளமையானது. காலத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது.

✶ உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கி வருகிறது.

✶ உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண இலக்கிய வளம் பெற்று, அறிவியல் தமிழ், கணினித்தமிழ் வழியாக தமிழ்மொழி வளர்ந்து கொண்டே வருகிறது.

✶ எனவே, தமிழ்மொழி வளர்மொழி என்பதை நாம் உணர்கிறோம்.

## கூடுதல் வினாக்கள்

## I. நிரப்புக

1. உலகில் ___________ மொழிகள் உள்ளன.
   விடை : ஆராயிரம்
2. சங்க இலக்கியங்கள் ___________, ___________.
   விடை : எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
3. 'பேஸ்புக்' என்பதன் தமிழ்ச்சொல் ___________.
   விடை : முகநூல்
4. மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பு ___________.
   விடை : மொழி
5. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் ___________ எழுத்துகளாகவே அமைந்துள்ளன.
   விடை : வலஞ்சுழி
6. '85' இன் தமிழ் எண் ___________.
   விடை : அரு
7. 'அரசு' என்னும் தமிழ்ச்சொல் இடம்பெறும் பழந்தமிழ் நூல் ___________.
   விடை : திருக்குறள்
8. கமுகு (பாக்கு) ___ தாவர இலையின் பெயர் ___________.
   விடை : கூந்தல்
9. நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் ___________.
   விடை : தொல்காப்பியம்

## II. குறு வினா

**1. தமிழ் எழுத்துகளில் வலஞ்சுழி எழுத்துகள் யாவை?**

அ, எ, ஔ, ண, ஞ

**2. பூவின் ஏழுநிலைகளுக்கும் உள்ள தமிழ்ப் பெயர்கள் யாவை?**

| | | | |
|---|---|---|---|
| அரும்பு | மொட்டு | முகை | மலர் |
| அலர் | வீ | செம்மல் | |

**3. 'மா'-என்னும் ஒரு சொல் தரும் பல பொருளைக் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| மரம் | விலங்கு | பெரிய | திருமகள் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



| | | | |
|---|---|---|---|
| அழகு | அறிவு | அளவு | அழைத்தல் |
| துகள் | மேன்மை | வயல் | வண்டு |

4. **தமிழ்க்கவிதை வடிவங்கள் யாவை?**

| | | | |
|---|---|---|---|
| துளிப்பா | புதுக்கவிதை | கவிதை | செய்யுள் |

5. **தமிழ் உரைநடை வடிவங்கள் யாவை?**

| | | |
|---|---|---|
| கட்டுரை | புதினம் | சிறுகதை |

6. **இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எவற்றைக் கூறலாம்?**

| | | | |
|---|---|---|---|
| இணையம் | முகநூல் | புலனம் | செயலி |
| குரல் தேடல் | தேடுபொறி | தொடுதிரை | |

7. **சங்க நூல்கள் யாவை?**

| | |
|---|---|
| பத்துப்பாட்டு | எட்டுத்தொகை |

## III. சிறுவினா

1. **தமிழ் வளமைமிக்கமொழி எவ்வாறு?**
   - ✶ தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்மொழி.
   - ✶ எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது.
   - ✶ திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது.
   - ✶ சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.

   இவ்வாறு இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது தமிழ்மொழியாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் ஒன்று


விரிவானம்

# கனவு பலித்தது

கடிதம்

79VU91

## மனவரைபடம்




## தெரிந்து தெளிவோம்

**தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள்**

- ✶ மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்.
- ✶ இஸ்ரோ அறிறியல் அறிஞர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை.
- ✶ இஸ்ரோவின் தலைவர் டாக்டர் கை. சிவன்.

## கற்பவை கற்றபின்

**1. இக்கதைக்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**

தலைப்பு: முயற்சி திருவினையாக்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.**

திருவில்லிபுத்தூர்
20.06.20xx

அன்புள்ள மாமாவுக்கு,

நலம், நலம் அறிய ஆவலாக உள்ளேன். நான் நன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் எதிர்காலத்தில் உங்களைப்போல் ஒரு சிறந்த ஆசிரியராக பணியாற்ற விரும்புகிறேன். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்பதற்கேற்ப எல்லாம் வல்ல இறைவனைக் காட்டும் தகுதி ஆசிரியனுக்கே உண்டு என்பதை உணர்ந்து அசிரியப் பணியை விரும்புகிறேன்.

மாணவர்களுக்கு நன்முறையில் கற்பித்தல் செய்தாலும் ஒழுக்கமுள்ள மாணவர்களாக உருவாக்குவேன். சுமாராகப் பயிலும் மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்தி தேர்ச்சி பெற வழிவகை செய்வேன்.

ஆசிரியர் பணியே அறப்பணி ; அதற்கு உன்னை நீ அர்ப்பணி என்பதை உணர்வேன். ஆகவே, ஆசிரியர் பணியே எனது எதிர்காலக் கனவாகும்.

இப்படிக்கு
உங்கள் அன்பு மருமகன்
மு. பாலகுமரன்

**3. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

- ✶ இன்சுவையின் விடாமுயற்சியும், அவளுடைய அத்தையின் உற்சாக முயற்சியும் தான்.
- ✶ இன்சுவை முயற்சியில் தளர்ந்து இருக்கும்போது அவளுடைய அத்தையின் உற்சாக வார்தையும் ஆறுதல் மொழிகளும் அவளுக்கு உத்வேகத்தைத் தந்தது
- ✶ தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்ற எண்ணத்தைஅவளுடைய அத்தை நீக்கினார்.
- ✶ சாதனைக்கு மொழி ஒரு தடையே இல்லை என உணர்த்தினார்.
- ✶ சாதனையாளர்கள் பலரும் தம்தாய்மொழியில் படித்தவர்கள் என்பதை இன்சுவை உணர்ந்து கொண்டாள்.
- ✶ நூலகம் சென்று நூல் வாசிப்பு மூலம் இன்சுவை சிந்தனை வளத்தையும் அறிவியல் மனப்பான்மையும் பெருக்கிக் கொண்டதால் கனவான அறிவியல் துறைப் பணியானது; நனவானது.

**4. 'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கதைக்கு எவ்வாறு பொருந்துகிறத என்பதனை விளக்குக.**

- ✶ இன்சுவை சிறு வயது முதல் தான் ஓர் அறிவியல் ஆராய்ச்சியாளராக வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.
- ✶ பல முயற்சிகள் எடுத்தாள். ஆனால், அவளுடைய முயற்சிகளுக்குப் பல முட்டுக்கட்டைகள் விழுந்தன.
- ✶ சோர்ந்து போனாள். தன் அத்தைக்குக் கடிதம் எழுதுகிறாள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- ✶ தனது அத்தையின் கனிவான பேச்சும் உற்சாகமான வாரத்தைகளும் உத்வேகத்தை ஏற்படுத்தியது. இந்த உத்வேகம் தனது கனவை நனவாக்க பல வழிகளில் முயல்கின்றாள்.
- ✶ இறுதியாக தான் எண்ணிய எண்ணம் பலித்தது. ஆம். தான் ஓர் அறிவியில் ஆய்வாளராக ஆனாள். ஆகவே,'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கதைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

## ★ மதிப்பீடு ★

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

- ✶ தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணமாகும்.
- ✶ சாதனைக்கு மொழி ஒரு தடையே இல்லை.
- ✶ நீண்ட காலமாகவே அறிறியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள்.
- ✶ தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பல காணப்படுகின்றன.
- ✶ தொல்காப்பியர் தன் நூலில் "நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" ஐம்பெரும்பூதங்களால் ஆனது இவ்வுலகம் என்றும், உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியுள்ளார் என்பதைக் காணலாம்.
- ✶ முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள் முதலிய நூல்கள் மழைப்பொழிவு பற்றிய அறிவியல் செய்திகளைக் குறிப்பிடுகின்றன.
- ✶ திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்பதை ஒளவையார் "கடல் நீர் முகத்த கமஞ்சூழ் எழிலி..." என்றுதம் பாடலில் கூறியள்ளார்.
- ✶ பதிற்றுப்பத்து, நற்றிணை முதலிய இலக்கிய நூல்கள் அறுவை மருத்துவம் பற்றி விளக்குகின்றன.
- ✶ தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றும் அறிவியல் கருத்தைக் கபிலர் "தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட பனையளவு காட்டும்" -என்று தம் பாடல் வழி உணரலாம்.
- ✶ தற்காலத்தில் பல்வேறு துறைகளில் தமிழர்கள் கோலோச்சி வரக்காரணம் சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிதல், நூலகம் சென்று நூல் பல கற்று அதன்மூலம் அறியும் செய்திகளேயாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in




இயல் ஒன்று

கற்கண்டு

# தமிழ் எழுத்துகளின் வகை தொகை

7AELCB

## மனவரைபடம்




## நுழையும் முன்




உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்றுநோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்து கொண்டான். இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான். மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும். தமிழ் எழுத்துகளின் வகை தொகை அறிவோமா!

## ஒலித்துப் பார்த்து உணர்வோம்

அ, இ, உ, எ, ஒ - ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன

ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.

## கட்டத்தில் உள்ளவை

✶ குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 1 மாத்திரை

✶ நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 2 மாத்திரை

✶ மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## ஒலித்துப் பார்த்து உணர்வோம்

✶ க், ச், ட், த், ப், ற் - ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன

✶ ங், ஞ், ண், ந், ம், ன் - ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன

✶ ய், ர், ல், வ், ழ், ள் - ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

## கட்டத்தில் உள்ளவை

✶ ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு அரை மாத்திரை

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

(எ.கா) கபிலர் - 1 + 1 + 1 + ½ = 3 ½

முத்தமிழன் - 1 + ½ + 1 + 1 + 1 + ½ = 5

பொன்ராஜ் - 1 + ½ + 2 + ½ = 4

ஊர்க்காவலன் - 2 + ½ + ½ + 2 + 1 + 1 + ½ = 7 ½

மூவேந்திரன் - 2 + 2 + ½ + 1 + 1 + ½ = 7

அய்யனார் - 1 + ½ + 1 + 2 + ½ = 5

## ★ மதிப்பீடு ★

**1. கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.**

| வ.எண் | குறிப்பு | சொல்லின் மாத்திரை அளவு | சொல் |
|---|---|---|---|
| 1. | உயிரெழுத்தில் தொடங்கும் சொல் | 2 மாத்திரை | அது |
| 2. | ஓரெழுத்துச் சொல் | 2 மாத்திரை | கை |
| 3. | வல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | காலை |
| 4. | மெல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | மடமை |
| 5. | இடையின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | வாழ்த்து |
| 6. | ஆய்த எழுத்து இடம்பெறும் சொல் | 2 ½ மாத்திரை | எ.ஃ.கு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. தமிழ்மொழியின் இலக்கணம் வகைப்படும்_____________
   விடை : ஐந்து
2. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு _____________
   விடை : 1 மாத்திரை
3. நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு _____________
   விடை : 2 மாத்திரை
4. மெய் மற்றும் ஆய்த எழுத்துகளை ஒலிக்க கால அளவு_____________
   விடை : அரை மாத்திரை
5. உயிர்மெய் எழுத்துகள் _____________ வகையாகக் கூறலாம்.
   விடை : இரண்டு

## குறு வினா

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

✶ தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.

✶ அவை எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்.

**2. மாத்திரை என்பது யாது?**

ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

**3. மெய்யெழுத்துகளின் வகைகள் யாவை?**

வல்லினம் (க், ச், ட், த், ப், ற்)

மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்)

இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்)

**4. எழுத்து எனப்படுவது யாது?**

ஒலி வடிவாக எழுதப்படுவதும் வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**5. உயிர் எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?**

✶ வாயைத் திறத்தல்

✶ உதடுகளை விரித்தல்

✶ உதடுகளைக் குவித்தல்

ஆகிய எளிய செயல்பாடுகளால் உயி எழுத்துகள் பிறக்கின்றன.

**6. தமிழ் எழுத்துக்களுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

★ குறில் - 1 மாத்திரை

★ நெடில் - 2 மாத்திரை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



★ மெய், ஆய்தம் - ½ மாத்திரை

## கட்டுரை எழுதுக.

### நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன்

**முன்னுரை :**

"தமிழுண்டு தமிழ்மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

என்று தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் தம் இரு கண்களாகக் கருதி உழைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

**மொழிப்பற்று :**

தமிழ் மொழியின் இனிமையில் திளைத்தவர் பாவேந்தர். திங்களும், பரிதியும், விண்ணும், மண்ணும் தோன்றிய போதே தமிழும் தோன்றியது என்று அதன் பழமை பேசுகிறார் கவிஞர்.

"தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று தமிழைத் தம் உயிராகக் கருதும் அவர் தமிழ்ப்பற்றின் ஆழத்தை அவர் கவிதைகளில் கண்டு களிக்கலாம்.

**நாட்டுப்பற்று :**

மொழிப் பற்றோடு நாட்டுப் பற்றும் மிக்கவர் அவர்.

"இமயச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்பவன் மருந்து கொண்டு ஏகினான்"

என்று பாரத ஒருமைப்பாட்டை அருமையாக எடுத்து இயம்புகிறார்.

"விழுந்த தமிழ்நாடு தலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டினும் தருவேன்"

என்ற அடிகள் அவர் நாட்டுப்பற்றை விளக்கும்.

**பெண்கள் நலம் :**

பாரதியைப் போல் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகளைக் கண்டு கொதித்தவர் பாவேந்தர்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்தல் முயல்கொம்பே"

என்று பாடி பெண்ணடிமையை ஒழிக்கப் பாடுபட்டார். கைம்பெண்கள் மறுவாழ்வு பெற

"பாடாத தேனீ, உலவாத் தென்றல்,
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ"

என்று கேட்டு குமுறுகிறார்.

**சாதியும் மதமும்:**

சாதியாலும், மதத்தாலும் மக்களை அடிமை கொள்ளுவதை அறவே வெறுத்தவர் பாவேந்தர். "ஒரு கடவுள் உண்டு என்போம்; உருவணக்கம் ஏற்போம். உள்ள பல சண்டையெல்லாம் ஒழியும் மதம் ஒழிந்தால்" என்பது அவர் கொள்கை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**முடிவுரை :**

இவ்வாறு "புதியதோர் உலகு செய்வோம். கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்று புறப்பட்டுத் தம் கவிதைத் திறத்தால் நாட்டு மக்களின் இதயத்தே நல்லறிவு கொளுத்தி அவர்களைத் தன்மானம் உடையவர்களாக வாழச் செய்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களே நான் விரும்பும் கவிஞர் ஆவார் என்று மீண்டும் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## மொழியை ஆள்வோம்

### கேட்டுப் பார்த்து உணர்க

1. இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.
2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.

### பேச்சால் வெளிப்படுத்தி மகிழ்க

1. கேட்டறிந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காட்டுக.
2. கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேச்சு.

### தமிழ் இனிது

அனைவருக்கும் இனிய வணக்கம். தமிழ் மொழியானது சொல்லில் இனிமை, பொருளில் இனிமை, ஓசையில் இனிமை. தமிழ் என்றாலே இனிமை என்பது பொருளாகும்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்' என்று மகா கவியும்

"தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாவேந்தரும் தமிழின் இனிமையைக் கூறுகின்றனர். தமிழினை, தேன்தமிழ், தீந்தமிழ் என்று கூறுவதில் தமிழின் இனிமையை வெளிப்படுத்துகிறோம். மிக்க நன்றி.

### தமிழ் எளிது

தமிழ் மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் மிகவும் எளியதாகும். எத்தனையோ மொழிகள் உலகில் தோன்றினாலும் தமிழ்மொழி அழியாமல் நிலைத்திருக்கக் காரணம் அதன் எளிமையே ஆகும். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவரும் எளிதாகக் கற்க முடியும். அதனாலேயே இந்தியாவிற்கு வந்து பல வெளி நாட்டவர் தமிழைக் கற்று பல இலக்கியங்களையும் படைத்துள்ளனர். எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகளைக் கூறும் மொழியாகவும், உலக தமிழ்மொழி போல எளிதான மொழி எதுவுமில்லை என்பதை நாம் உணர்கிறோம்.

### தமிழ் புதிது

அனைவருக்கும் இனிய வணக்கம். தமிழ் சங்க இலக்கியங்கள் முதல் இன்று தோன்றிய புதிய இலக்கியங்கள் வரை பல பரிணாமங்களைப் பெற்று புதுமையாக விளங்கி வருகிறது. இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச் சொற்கள் உருவாகி வருகின்றன. பைந்தமிழாக இருந்த தமிழ் செம்மொழியாக உலக அளவில் உயர்ந்து நிற்கின்றது. செய்தித்தாள், தொலைக்காட்சி முதலிய ஊடகங்கள் பயன்படத்தக்க மொழியாக விளங்கி வருகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**சொல்லைக் கேட்டு எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| இன்பத்தமிழ் | தொல்காப்பியம் | சுப்புரத்தினம் | பன்னிரண்டு |
| பாவேந்தர் | அஃறிணை | செந்தமிழ் | ஆராய்ச்சியாளர் |
| உயிரினங்கள் | கருவூவங்கள் | | |

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக. சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல் ஆரோக்கியமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு ________ சொல்வது
   அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழமையைச் ஈ) பல மொழிகளில்
2. நோயற்ற வாழ்வைத் தருவது ________
3. உடல் நலமே________அடிப்படை
4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?
5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

**விடைகள்:**

1. (ஆ) சுருங்கச்
2. சுத்தம்
3. உழைப்புக்கு
4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம்.
5. பழமொழிகளின் சிறப்பு

**பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக**

1. எங்க ஸ்கூல்லே சுற்றலா கூட்டிட்டுப் போறாங்க
2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

**விடைகள்**

1. எங்கள் பள்ளியில் சுற்றுலா கூட்டிக்கொண்டு போறார்கள்.
2. பெற்றோரிடம் அனுமதிக் கடிதம் (இசைவு மடல்) வாங்கி வரச் சொன்னார்கள்.

**ஆய்ந்தறிக**

வினா: பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்

S. இனியன், எஸ். இனியன், ச. இனியன் - இவற்றுள் சரியானது எது? ஏன்?

**விடை: ச. இனியன் என்பதே சரியானது.**

பிறமொழிக் கலப்பின்றி பெயரையும், முன்னெழுத்தையும் தமிழிலேயே எழுத வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## மொழியோடு விளையாடு

**திரட்டுக**

'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க

| | | |
|---|---|---|
| இளமை | இனிமை | நுண்மை |
| பண்மை | வளமை | செம்மை |
| கருமை | வெண்மை | வண்மை |
| வன்மை | திண்மை | மடமை |

**சொல் வளம் பெறுவோம்**

1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா) கரும்பு - கரு, கம்பு

கவிதை - ________

பதிற்றுப்பத்து - ________

பரிபாடல் - ________

**விடை:** கவிதை - கவி, கதை, விதை, தை

பதிற்றுப்பத்து - பதி, பற்று, பத்து, பதித்து

பரிபாடல் - பரி, பாடல், பால், பல், பா, படல்

2. **இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

**விடை:**

| | | |
|---|---|---|
| தமிழ்மொழி | நீதி நூல் | தமிழ் நூல் |
| நீதிமொழி | மணி மொழி | எழுதுகோல் |
| மணிநீதி | நூல் எழுது | மாலை எழுது |
| மீன்கண் | நூல் வெளி | வெளி மொழி |
| தமிழ்மணி | கண்மணி | மணிமாலை |
| தமிழ்மாலை | நூல்மாலை | விண்வெளி |

**பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.**

(எ.கா) அ ___ அன்பு தருவது தமிழ்

ஆ ___ ஆற்றல் தருவது தமிழ்

இ ___ இனிமை தருவது தமிழ்

ஈ ___ ஈடு இல்லாதது தமிழ்

உ ___ உணர்வு தருவது தமிழ்

ஊ ___ ஊக்கம் தருவது தமிழ்

எ ___ என்றும் வேண்டும் தமிழ்

ஏ ___ ஏற்றம் தருவது தமிழ்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | க | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

**விடை**

1. பாரதியார்
2. பாரதிதாசன்
3. திருவள்ளுவர்
4. ஔவையார்
5. சுரதா
6. வாணிதாசன்

## நிற்க அதற்குத் தக

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன். தாய்மொழியிலேயே கல்வி கற்பேன். தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

## கலைச்சொல் அறிக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலஞ்சுழி | – | Clock wise | இடஞ்சுழி | – | Anti clock wise |
| இணையம் | – | Internet | குரல்தேடல் | – | Voice Search |
| தேடுபொறி | – | Search engine | தொடுதிரை | – | Touch Screen |
| செயலி | – | App | புலனம் | – | Whatsapp |
| மின்னஞ்சல் | – | E-mail | | | |

## இணையத்தில் காண்க

உனக்குப் பிடித்த தமிழ்க் கவிஞர் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி அறிக.

## இணையச் செயல்பாடுகள்

**பிழை**

**படி 1**

கொடுக்கப்பட்டிருக்கும் உரவி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்திப் பிழை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

**படி 2**

செயலியைத் திறந்தவுடன் நல்வரவு என்னும் திரையில் Play குறியீட்டு வடிவில் இருக்கும் பொத்தானை அழுத்தவும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**படி 3**

திரையில் தோன்றும் வார்த்தைகளில் ஒற்று அல்லது எழுத்துப் பிழை உண்டா? இல்லையா? என்பதைத் தெரிவு செய்க.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள்**

Figure ****

**செயல்பாட்டிற்கான உரலி**

http://play.google.com\store\apps\details?id=com.ijshyut.pizhai&hl=cn

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# இயல் 1

## அலகுத்தேர்வு-1

### (கவிதைப் பேழை)

**மொத்த மதிப்பெண்கள்:25**

**I. நிரப்புக:** **5 x 1=5**

1. தாய் மொழியில் படித்தால்--------- அடையலாம்.
2. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------------
3. ஏற்றத் தாழ்வற்ற -------------அமைய வேண்டும்.
4. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்---------------
5. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------------------

**II. பொருத்துக:** **4 x 1=4**

6. விளைவுக்கு - (அ)பால்.
7. அறிவுக்கு - (ஆ)இளநீர்.
8. புலவர்க்கு - (இ)தோல்.
9. இளமைக்கு - (ஈ) நீர்.

**III. நயம் அறிக:** **2**

10. எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
    எட்டிடவே கும்மி கொட்டுங்கடி
    ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு
    ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம்

**IV. அடிபிறழாமல் எழுதுக:** **4**

11. தமிழுக்கும்............ எனத்தொடங்கும் இன்பத்தமிழ் பாடல் .

**V. குறு வினா:** **2 x 2=4**

12. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
13. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

**VI. சிறுவினா:** **2 x 3=6**

14. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
15. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# அலகுத்தேர்வு -2

## (உரைநடை உலகம், விரிவானம்)

**மொத்த மதிப்பெண்கள்:25**

**I. நிரப்புக:** **6x 1=6**

1. தொன்மை என்னும் சொல்லின் பொருள்.............
2. சீரிளமை என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்...................
3. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.............
4. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது............ .
5. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்...................
6. "மா" என்னும் சொல்லின் பொருள்.................

**II. சொற்றொடரில் அமைத்து எழுதுக:** **1**

7. தனிச்சிறப்பு .

**III. குறு வினா:** **2 x 2=4**

8. தமிழ் மூத்த மொழி எனப்படுவது எதனால்?
9. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**IV. சிறுவினா:** **2 x 3=6**

10. அஃறிணை,பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?
11. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

**V. விடையளி:**

12. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள்எவற்றைக் கருதுகிறீர்கள்?
13. கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## அலகுத்தேர்வு-3

### (கற்கண்டு, மொழி அள்வோம்,மொழியோடு விளையாடு)

**மொத்த மதிப்பெண்கள்: 25**

**I. நிரப்புக:** 3 x 1=3

2. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு...................
3. மெய் எழுத்துகளை..........வகைகளாகப் பிரிக்கலாம்.
4. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு.........

**II. சிறு வினா:** 4x 2=8

5. தமிழ் மொழியின் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. மாத்திரை என்றால் என்ன? சான்று தருக.
7. உயிரெழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?
8. மெய்யெழுத்துகளில் வகைகளைக் கூறுக?

**III. மொழிப்பயிற்சி:** 8

**(அ) கலைச்சொல் அறிக:**

I) clock wise. ii)voice search.

**(ஆ) பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.**

I) பெற்றோரிடம் பர்மிசன்லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

**(இ) கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

I) பரிபாடல்

**(ஈ) சொற்களைஇணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

நூல், மொழி, நீதி, தமிழ்.

**(உ) பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக .**

(ஈடு,என்றும்,ஆற்றல்,அழகு)

I) .................. தருவது தமிழ்.

II) ................வேண்டுவது தமிழ்.

III) .................. தருவது தமிழ்.

IV) .............. இல்லாதது தமிழ்.

**IV. கட்டுரை எழுதுக :.**

நான் விரும்பும் கவிஞர்.

________________________________________

________________________________________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் இரண்டு

# இயற்கை இன்பம்



**கற்றல் நோக்கங்கள்**

- இயற்கையின் சிறப்புகளை அறிதல்.
- இயற்கையைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி விவாதித்தல்.
- உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்தல்.
- மழை பெய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளை வகுப்பறையில் விவாதித்தல்.
- பறவைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை அறிதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in




இயல் இரண்டு

கவிதைப்பேழை

# சிலப்பதிகாரம்

7AXDFL

## மனவரைபடம்




## நுழையும் முன்




நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கடலும், மலையும், கதிரும், நிலவும் மழையும் பனியும் இயற்கையின் கொடைகள் அல்லவா? அவற்றைக் கண்டு மகிழாதவர் உண்டோ? நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும், மழையின் பயனையும் சிலப்பதிகாரம் போற்றுகிறது.

திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை
போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்த லான்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

- இளங்கோவடிகள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in





வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!
மாலை அணிந்த சோழனின் குளிர்ந்த
வெண்குடை போல அருளை வழங்கும்
வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!



கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!
காவிரி நாடன் சோழனின் ஆணைச்
சக்கரம் போலவே இமயத்தை வலம்வரும்
கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!



வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!
கடல்சூழ் உலகுக்கு அருளைப் பொழியும்
மன்னனைப் போல முகில்வழி சுரக்கும்
வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!

## பாடலின் பொருள்

தேன் நிறைந்த ஆத்திமலர் மாலையை அணிந்தவன் சோழ மன்னன். அவனுடைய வெண்கொற்றக் குடை குளிர்ச்சி பொருந்தியது. அதைப் போல வெண்ணிலவும் தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது. அதனால் வெண்ணிலவைப் போற்றுவோம்.

காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன். அவனது ஆணைச் சக்கரம் போல, கதிரவனும் பொன்போன்ற சிகரங்களையுடைய இமயமலையை வலப்புறமாகச் சுற்றிவருகிறது. அதனால் கதிரவனைப் போற்றுவோம்.

அச்சம்தரும் கடலை எல்லையாகக் கொண்ட உலகிற்கு மன்னன் அருள் செய்கிறான். அதுபோல, மழை, வானிலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது. அதனால் மழையைப் போற்றுவோம்.

## நூல்வெளி



சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம். இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், என்றெல்லாம் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது. அவ்வாழ்த்துப்பகுதி நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## சொல்லின் பொருள்

**சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் | - | நிலவு | பொற்கோட்டு | - | பொன்மயமான சிகரத்தில் |
| கொங்கு | - | மகரந்தம் | மேரு | - | இமயமலை |
| அலர் | - | மலர்தல் | நாமநீர் | - | அச்சம் தரும் கடல் |
| திகிரி | - | ஆணைச்சக்கரம் | அளி | - | கருணை |

## கற்பவை கற்றபின்

**1. வளர்பிறையும் தேய்பிறையும் என்னும் தலைப்பில் பேசுக.**

- ➢ வளர்பிறை என்பது அமாவாசையில் தொடங்கி பௌர்ணமியில் முடிவது தேய்பிறை என்பது பௌர்ணமியில் தொடங்கி அமாவாசையில் முடிவது.
- ➢ சந்திரன் பூமியை சுற்றும் போது அதில் விழும் சூரிய ஒளிக்கு ஏற்ப வளர்பிறை தேய்பிறை என்று பூமியில் நாம் பார்க்க முடிகிறது.
- ➢ மக்கள் தேய்பிறையைக் காட்டிலும் வளர்பிறையில் மட்டும்தான் அதிகமான விழாக்களை நடத்துவது வழக்கம் .
- ➢ ஏனென்றால், அது அவர்களுக்கு நல்ல காலங்களாக தோன்றுகிறது.
- ➢ வளர்பிறையில் ஒரு செயலைத் தொடங்கினால் அது சிறப்புற்று அமைவதாக மக்களின் நம்பிக்கை ஆகும். இந்துக்கள் மட்டுமல்ல இதர மதத்தினரும் வளர்பிறையை முக்கியத்துவம் செய்கின்றார்கள். குறிப்பாக முகமதியர்களுக்கு வளர்பிறையில் மூன்றாம் பிறை சிறப்பாக அமைகின்றது.

**2. நீங்கள் விரும்பும் இயற்கை பொருட்களின் பெயர்களை பட்டியலிடுக.**

மரம், செடி, கொடி, சூரியன், சந்திரன், நிலவு, வானம், கடல் நீர், மழை, காய்கள், புற்கள், விதைகள், பறவைகள், விலங்குகள், மண், ஏரி, மலை.

**3. நிலா என்னும் தலைப்பில் நான்கு அடிகளில் கவிதை படைக்க.**

அழகு நிலா
வெண்ணிற ஆடையில்
வருகை தந்து
அனுதினமும்
கண்களையும் தேசத்தையும்
குளிரச்செய்து
என்னை என்றும் தீண்டி
அணைந்துகொள்வாய்
என் நிலவு மங்கையே.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. கழுத்தில் சூடுவது
   அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை
2. கதிரவனின் மற்றொரு பெயர் _______
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்
3. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) வெண் + குடை ஆ) வெண்மை + குடை
   இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை
4. 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு
   இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு
5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______
   அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்
6. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______
   அ) அவன்அளிபோல் ஆ) அவனளிபோல் இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

**விடை:**

1. தார் (அ)
2. ஞாயிறு (ஆ)
3. வெண்மை + குடை (ஆ)
4. பொன் +கோட்டு (அ)
5. கொங்கலர் (இ
6. அவனளிபோல் (ஆ)

### ★ நயம் அறிக ★

**1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனை சொற்களை எடுத்து எழுதுக.**

அங்கண் - அளித்த
திங்களை -திங்களை
ஞாயிறு - ஞாயிறு
மாமலை -மாமலை
மேரு வலம்
மேல் நின்று

**2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை சொற்களை எடுத்து எழுதுக.**

திங்களை மாமழை
கொங்கு நாமநீர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



அங்கு

## ★ குறு வினா ★

**1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?**

சிலப்பதிகாரக் காப்பியம் திங்கள் ஞாயிறு மாமழை ஆகியவற்றை வாழ்த்தி தொடங்குகிறது.

**2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?**

- நமது பூமியில் மட்டுமே அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு ஏற்ற இயற்கை வளம் உள்ளது.
- நாம் இயற்கையைப் போற்றி பாதுகாக்காவிடில் இயற்கை தன் சமநிலை மாறி புவி வெப்பம் அடைந்து விடும்.
- இயற்கையே உயிரினங்களுக்கு மணிமுடி. அதனால்தான் இயற்கையை நாம் போற்றுகிறோம்.

## ★ சிந்தனை வினா ★

**இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்பட காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

- உலகம் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பூதங்களால் ஆனதாகும்.
- பண்டைய கால மக்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தனர்.
- "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார்.
- பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த காரணத்தால் இயற்கையை நன்கு அறிந்திருந்தனர்.
- ஐவகை நிலங்களின் வகைகளைக் கொண்டு அதற்கேற்ற உரிப் பொருளையும் உடையவர்களாய் வாழ்ந்துவந்தனர். அவர்கள் நிலத்திற்கு ஏற்ப தொழிலையும் செய்து வந்தனர் .
- மனிதன் இயங்குவதும் வாழ்வதும் இயற்கையினால் தான் .அந்த இயற்கை இல்லாமல் மனிதனால் வாழ முடியாது.
- எனவே, இயற்கையைப் போற்றி நாம் வாழ வேண்டிய சூழ்நிலையை உள்ளோம். அதனால்தான் மனிதர்கள் இயற்கையைப் போற்றுவதை வழக்கமாக்கிக் கொண்டனர்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1 . ஆத்திமலர் மாலையை அணிந்தவன் --------மன்னன்.
விடை: சோழ.

2. காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்தவன்------------
விடை: சோழ மன்னன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



3. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர்-----------------
   விடை: இளங்கோவடிகள்.
4. இளங்கோவடிகள் --------மன்னர் மரபைச் சேர்ந்தவர்.
   விடை: சேர .
5. சிலப்பதிகாரம்---------------- காப்பியங்களுள் ஒன்றாகும்.
   விடை: ஐம்பெரும்.
6. தமிழில் தோன்றிய முதல் காப்பியம்-----------------.
   விடை: சிலப்பதிகாரம்.


கவிதைப்பேழை

இயல் இரண்டு

# காணி நிலம்

7BG5IW

## மனவரைபடம்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## நுழையும் முன்




அடுக்கங்களில்வாழும் பலர் இயற்கை தரும் இன்பத்தை எண்ணி ஏங்குகிறார்கள். "வீடு" என்பது எப்படி இருக்க வேண்டும் என்று பாரதியார் கற்பனை செய்கிறார். இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்த்துகிறார். இயற்கையைப் பலவகைகளிலும் போற்றிடும் பாரதியின் கனவு இல்லத்தைப் பற்றி அறிவோம்.

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்குத்
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்குக்
கேணி அருகினிலே - தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரெண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல

முத்துச் சுடர் போலே - நிலாவொளி
முன்பு வரவேணும் - அங்குக்
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதில் படவேணும் - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாய் இளம்
தென்றல் வரவேணும்.

- பாரதியார்



## பாடலின் பொருள்

காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்க வேண்டும். நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.

அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## நூல்வெளி





இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர். எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.

தம் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்.

பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

## சொல்லின் பொருள்

**சொல்லும் பொருளும்**

| | | |
|---|---|---|
| காணி | - | நில அளவைக் குறிக்கும் சொல் |
| மாடங்கள் | - | மாளிகையின் அடுக்குகள் |
| சித்தம் | - | உள்ளம் |

## கற்பவை கற்றபின்

1. **பாடலை ஓசை நயத்துடன் படித்து மகிழ்க.**
2. **காணி என்பது நில அளவை குறிக்கும் சொல் இதுபோல நிலத்தை அளக்க பயன்படும்சொற்களை பட்டியலிடுக.**

   அடி, ஏக்கர், குழி, செண்ட், ஒரு மரக்கா, பர்லாங்கு, மீட்டர், கிலோமீட்டர், ஹெக்டேர்.
3. **என் கனவு இல்லம் என்னும் தலைப்பில் பேசுக**
   - ➢ என்னுடைய இல்லம் காற்றோட்டமான பரந்த இடத்தில் இயற்கையோடு இயைந்த இல்லமாக விளங்க வேண்டும் .
   - ➢ வீட்டைச்சுற்றி பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கவும் வீட்டின் அருகே பல்வேறு மரங்களையும் காய்கறி, செடி, கொடிகளையும் வளர்க்க ஏதுவாக இல்லம் இருக்கவேண்டும்.
   - ➢ பல உயிரினங்களுக்கு புகலிடமாக விளங்க வேண்டும். வீடு அழகு வண்ணத்தால் பூசப்பட்டு, இருப்பவர்களுக்கு நல்ல நிழல் தரும் சூழ்நிலையில் அமைந்திருக்கவேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. ‘கிணறு’ என்பதைக் குறிக்கும் சொல் ______
   அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு
2. ‘சித்தம்’ என்பதன் பொருள் ______
   அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்
3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ______
   அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்
4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) நன் + மாடங்கள் ஆ) நற் + மாடங்கள்
   இ) நன்மை + மாடங்கள் ஈ) நல் + மாடங்கள்
5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) நிலம் + இடையே ஆ) நிலத்தின் + இடையே
   இ) நன்மை + மாடங்கள் ஈ) நிலத்+திடையே
6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்
7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) நிலாஒளி ஆ) நிலஒளி இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

1. விடை: (ஆ) கேணி
2. விடை: (அ) உள்ளம்
3. விடை: (அ) அடுக்குகள்
4. விடை: (இ) நன்மை +மாடங்கள்
5. விடை: (ஆ) நிலத்தின்+இடையே
6. விடை: (ஈ) முத்துச்சுடர்
7. விடை: (இ) நிலாவொளி.

### ★ பொருத்துக ★

1. முத்துச்சுடர் போல் - (அ) நிலாவொளி
2. தூய நிறத்தில் - (ஆ)மாடங்கள்
3. சித்தம் மகிழ்ந்திட - (இ)தென்றல்

**விடை:** 1-இ, 2.-அ, 3-ஆ

### ★ நயம் அறிக ★

1. **காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**
   காணி பத்து பத்து



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| கட்டித் | பக்கத்திலே | பன்னிரண்டு. |
| முத்து | கத்துங் | |
| முன்பு | காதில் | |

2. **காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை சொற்களை எடுத்து எழுதுக**

| | |
|---|---|
| காணி | காணி |
| தூணில் | கேணி |
| பத்துப் | முன்பு |
| முத்துச் | தென்றல் |
| கத்துங் | |
| சித்தம் | |

## ★ குறு வினா ★

1. **காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?**

காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித் தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்க வேண்டும். நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னை மரங்கள் வேண்டும்.

அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.

2. **பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.**

- ➢ பாரதியார் ஓர் இயற்கை கவிஞர் ஆவார் .
- ➢ "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்" காக்கை குருவிகள் எங்கள் ஜாதி" என்று பல பாடல்களைப் பாடியிருப்பதன் மூலம் அவர் இயற்கையின் மீது உள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுகிறது.
- ➢ முத்துப்போல நிலவு ஒளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் ஓசை கேட்கவேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும் என்று பாரதியார் இயற்கையின் மீது உள்ள விருப்பத்தை எடுத்துரைக்கிறார்.

## ★ சிந்தனை வினா ★

**பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்க்கிறார்கள் என எழுதுக.**

வாழைமரம், மாமரம், பலா மரம், கொய்யா மரம் முருங்கை மரம், வேப்பமரம், புங்கன் மரம், சப்போட்டா மரம், தென்னை மரம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




இயல் இரண்டு

உரைநடை உலகம்

# சிறகின் ஓசை

7BYHH7

## மனவரைபடம்




## நுழையும் முன்




மனிதர்கள் பொருள் தேடுவதற்காக வேறு ஊர்களுக்குச் செல்கிறார்கள். சிலர் திரும்புகிறார்கள். சிலர் அங்கேயே தங்குகிறார்கள். மனிதர்களைப் போலவே பறவைகளும் வேறு இடங்களுக்கும் நாடுகளுக்கும் செல்கின்றன. பறவைகள் போகாத நாடுகள் இல்லை; மலைகள் இல்லை; நீர்நிலைகள் இல்லை; பறவைகளோடு கொஞ்சம் பறந்து போகலாமா !

## தெரிந்து தெளிவோம்

**கப்பல் பறவை**



சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (Frigate bird). இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.

பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY) எனப்படும்.
உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் - 20.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## இந்தியாவின் பறவை மனிதர்



இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி. தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார். அதனால், அவர் "இந்தியாவின் பறவை மனிதர்" என்று அழைக்கப்படுகிறார். பறவைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் "சிட்டுக்குருவியின் வீழ்ச்சி" (The fall of sparrow) என்று பெயரிட்டுள்ளார்.

## தெரிந்து தெளிவோம்




## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.**

குருவி, கொக்கு, மயில், மைனா, கிளி, புறா, ஆந்தை, சிட்டுக்குருவி, நாரை, காடை, கழுகு, வவ்வால், மரங்கொத்தி, குயில், கோழி, வான்கோழி.

2. **உங்கள் வீட்டுக்கு அருகில் பறவைகள் வருவதற்கு என்னென்ன செய்யலாம் என்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**அன்பரசி:**

நான் முதலில் அமைதியான சூழலை ஏற்படுத்துவேன் .நிறைய மரங்களை வளர்ப்பேன். பறவைகளை அன்போடும் கருணையோடும் பார்த்து அவைகளுக்குத் தேவையான தானியங்களையும் நீரினையும் வைப்பேன்.

**இளவரசி:**

நான் எங்கள் வீட்டு மொட்டை மாடியில் சிறு சிறு தானியங்களைத் தூவியும் சிறு கிண்ணத்தில் தண்ணீரும் வைத்பேன் .பறவைகளுக்குத் தேவையான கனி தரும் மரங்களையும் வளர்ப்பேன். கோடை காலங்களில் அவைகளுக்குத் தேவையான பழங்களை கடையில் வாங்கி வந்து நறுக்கி வைப்பேன்.

3. **பறவைகள் தொடர்பான பழமொழிகள் தொகுத்து எழுதுக.**

- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு .
- உயர உயர பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது.
- இனம் இனத்தோடு சேரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



- இலவு காத்த கிளி போல.
- எச்சில் கையால் காக்கா விரட்ட மாட்டான்.
- கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
- கூரையேறி கோழி பிடிக்க தெரியாதவள் வானம் ஏறி வைகுண்டம் போனாளாம்.
- சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை.

**4. இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் முழக்கத் தொடர்கள் எழுதுக.**

(எ.கா) காப்போம் காப்போம் பறவைகளைக் காப்போம்.

- வளர்ப்போம் வளர்ப்போம் மரங்களை வளர்ப்போம்.
- நீக்குவோம் நீக்குவோம் நெகிழிகளை நீக்குவோம்.
- அழிக்காதே அழிக்காதே காடுகளை அழிக்காதே.
- வெட்டாதே வெட்டாதே மரங்களை வெட்டாதே.
- படுத்தாதே படுத்தாதே காற்றை மாசுபடுத்தாதே.
- கெடுக்காதே கெடுக்காதே இயற்கையைக் கெடுக்காதே.
- மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.
- மழை நீர் நம் உயிர் நீர்.
- இயற்கையைக் காப்போம் இன்பமாய் வாழ்வோம்.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. 'தட்பவெப்பம்'' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம் இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்
2. 'வேதியுரங்கள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள் இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு+ரங்கள்
3. தரை இறங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும் இ) தரையுறங்கும் ஈ) தரைய்றங்கும்
4. வழி + தடம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) வழிதடம் ஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்
5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ______
   அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

1. விடை - (அ)தட்பம் + வெப்பம்.
2. விடை - (ஆ)வேதி + உரங்கள்.
3. விடை - (அ) தரையிறங்கும்.
4. விடை - (ஆ) வழித்தடம்.
5. விடை - (அ) துருவப் பகுதி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## ★ கோடிட்ட இடங்களை நிரப்புக ★

1. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை________
2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் ________
3. பறவைகள் இடம்பெயர்வதற்கு________ என்று பெயர்.
4. இந்தியாவின் பறவை மனிதர் ________
5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ________

**விடை:**

1. ஆர்டிக் ஆலா
2. சத்திமுத்தப் புலவர்
3. வலசை போதல்
4. டாக்டர் சலீம் அலி
5. உணவு

## ★ சொற்றொடரில் அமைத்து எழுதுக ★

1. **வெளிநாடு:** என் நண்பன் வெளிநாடு செல்ல ஆசைப்பட்டான்.
2. **வாழ்நாள்:** சிட்டுக்குருவியின் வாழ்நாள் 10 முதல் 13 ஆண்டுகள் ஆகும்.
3. **செயற்கை:** நாம் நம் வயல்களுக்கு செயற்கை உரங்களை இடுவது முற்றிலும் தவிர்ப்போம்.

## ★ பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக ★

1. மரங்களை வளர்த்து ______ யைக் காப்போம் _______ உரங்களை தவிர்த்து நிலவளம் காப்போம். (செயற்கை / இயற்கை)
2. தமிழகத்தில் வலசைப் பறவைகளின் வருகை ___________ தற்போது சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை __________ (குறைந்துள்ளது / மிகுந்துள்ளது)

**விடை:**

1. இயற்கைசெயற்கை.
2. மிகுந்துள்ளது குறைந்துள்ளது

## ★ குறு வினா ★

**1. பறவைகள் எக் காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?**

- உணவு, இருப்பிடம், தட்பவெப்ப நிலை மாற்றம், இனப்பெருக்கம் போன்றவைகளுக்காக பறவைகள் இடம்பெறுகின்றன.
- நிலவு, புவி ஈர்ப்பு பலம், விண்மீன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?**

- தலையில் சிறகு வளர்தல்.
- இறகுகளின் நிறம் மாறுதல்.
- உடலில் கற்றையாக முடி வளர்தல்.
- ஒரு வகைப் பறவையை வேறு வகைப் பறவை என்று கருதும் அளவிற்குக்கூட சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

## ★ சிறுவினா ★

**1. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவை இனங்களில் ஒன்று சிட்டுக்குருவி.சிட்டுக்குருவி கூடு கட்டி வாழும் பறவை இனத்தைச் சேர்ந்ததாகும். கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டு கொண்டே இருக்கும். கூடு கட்டிய பின் 3 முதல் 6 முட்டைகள் வரை இடும். 14 நாட்கள் அடைகாக்கும். 15ஆம் நாளில் குஞ்சுகள் வெளிவரும். துருவப் பகுதிகளைத் தவிர மனிதன் வாழும் இடங்களிலெல்லாம் சிட்டுக் குருவிகளும் வாழ்கின்றன. இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகளைக் காணலாம்.

இமயமலைத் தொடரில் சுமார் 4 ஆயிரம் மீட்டர் உயரத்தில் கூட இவை வாழ்கின்றன. இவற்றின் உணவுகளாக தானியங்கள், புழு பூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவற்றை உண்ணுகின்றன. சிட்டுக்குருவிகளின் குஞ்சுகள் பெரும்பாலும் புழு பூச்சிகளை உட்கொள்ளும். அதனால், தாய்க்குருவி புழு பூச்சிகளைப் பிடித்து தம் குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும்.

சிட்டுக்குருவியின் வாழ்நாள் 10 முதல் 13 ஆண்டுகள் மட்டுமே. சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது. ஆனாலும், வேகமாகப் பறக்கும் தன்மை கொண்டதாகும்.

**2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?**

- பறவைகள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் கண்டம் விட்டு கண்டம் பறந்து செல்லும்.
- அவை பெருங்கடலையும் மலைகளையும் கடந்து போகின்றன.
- பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாதையிலேயே பறக்கின்றன.
- சில பறவை இனங்கள் அதே பாதையில் தாய் நிலங்களுக்குத் திரும்புகின்றன.
- சில பறவைகள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.
- பயணம் செய்யும்போது சில வகைப் பறவைகள் இறை, ஓய்வு போன்ற தேவைகளுக்காக தரை இறங்குகின்றன.
- இடையில் எங்கும் நிற்காமல் பரந்து வாழும் பறவைகளும் உண்டு.
- வலசையின்போது பறவைகளின் உடலில் சில மாற்றங்கள் ஏற்படுவதும் உண்டு.
- அவை, தலையில் சிறகு வளர்தல், இறகுகளின் நிறம் மாறுதல், உடலில் கற்றையாக முடி வளர்தல், ஒரு வகைப் பறவையை வேறுவகைப் பறவை என்று கருதும் அளவிற்கு சில நேரங்களில் மாற்றங்களும் ஏற்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## ★ சிந்தனை வினா ★

**1. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்ற நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

- பறவைகள் உண்ணக்கூடிய பழங்கள், விதைகள் உடைய மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் வளர்க்க வேண்டும்.
- செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களை நாம் வயல்களில் பயன்படுத்த வேண்டும்.
- அதிக ஓசை தரக்கூடிய வெடி பொருட்களைத் தவிர்த்திடல் வேண்டும்.
- பறவைகளுக்கு நம்மால் முடிந்த வரை எந்தத் தொந்தரவும் செய்யாமல் அன்பு செய்யும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- பறவை இனங்களுக்குத் தேவையான உணவு, பழங்கள், மற்றும் தண்ணீர் நாள்தோறும் வைத்திடல் வேண்டும்.
- நாம் பறவை இனங்களை உண்பதைத் தவிர்க்கப்பட வேண்டும்.
- மரங்களை வெட்டாமல் அதிக மரங்களை நடுதல் வேண்டும்.
- மற்ற உயிர்களும் மனிதனைப் போலவேதான் என்பதை நன்கு உணர்ந்து மனிதர்களாகிய நாம் பறவையினங்கள் வாழ ஏற்ற சூழ்நிலை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.
- இவ்வாறு செய்தால் பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்படும்.

## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. சிட்டுக்குருவி ---------------வாழும் பறவை இனத்தைச் சார்ந்தது.
   **விடை:** கூடுகட்டி.
2. தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவை இனம் -----------------
   **விடை :** சிட்டுக்குருவி.
3. சிட்டுக்குருவியின் வாழ்நாள் ----------------ஆண்டுகள் ஆகும்.
   **விடை :** பத்து முதல் பதின்மூன்று.
4. குருவி எங்கள் சாதி என்று பாடியவர்------------------.
   **விடை:** பாரதியார்.
5. சிறகு அடிக்காமல் கடலையும் தாண்டி பறக்கும் பறவை-----------------.
   **விடை:** கப்பல் பறவை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




இயல் இரண்டு

விரிவானம்

# கிழவனும் கடலும்

7CHNQH

## மனவரைபடம்




## நுழையும் முன்




மனிதன் இயற்கையோடு போராடிக்கொண்டே இருக்கிறான். சில நேரங்களில் வெற்றி பெறுகிறான். சில நோரங்களில் தோல்வி அடைகிறான். ஆனால் முயற்சிகள் என்றும் ஓய்வதில்லை. மனிதன் இயற்கையோடு நடத்துகிற போராட்டமே அவன் வாழ்வை அமைக்கிறது. போராடுவதில் மகிழ்ச்சியும் வெற்றியும் இருக்கிறது. மீன் பிடிக்கப் போராடும் மீனவர் ஒருவரின் வாழ்வைப் பார்ப்போமா!

## கற்பவை கற்றபின்

**1. கடல் காட்சி ஒன்றைப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக. படத்திற்குப் பொருத்தமாக நான்கு வரிகளுள் எழுதுக.**





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in


- மாணவர்களே உங்கள் மீது நம்பிக்கை இருந்தால் தோல்வி உங்களை நெருங்க பயப்படும்.
- ஒரு மனிதனுக்கு உறுதியும் தன்னம்பிக்கையும் சேர்ந்து இருந்தால் அது வெற்றிக்கு வழிவகுக்கும் சான்றாக, மாணவனாக இருந்த குற்றாலீசுவரன் கடலிலே நீந்திச் சென்று சாதனை புரிந்தார் அந்தச் சாதனையை யாராலும் மறக்க முடியாது.
- எனவே, மாணவர்களாகிய நீங்கள் மனதுக்குள் நல்ல உறுதியும் தன்னம்பிக்கையும் பிறந்து எல்லாவற்றிலும் மிகப்பெரிய வெற்றியைப் பெறவேண்டும்.

**2. இக்கதையின் வழியாக நீங்கள் உணர்ந்தவற்றை வகுப்பில் பகிர்க.**

"வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் அதை வாழ்ந்து தான் பார்க்கணும்". "வெற்றிக்கு வயது ஒன்றும் தடையில்லை" சாண்டியாகோ வயது முதிர்ந்தவராக இருந்தாலும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் தொடர்ந்து போராடி இறுதியில் வெற்றி பெறுகிறார்.

பெரிய மீனைப் பிடித்து தன் முயற்சியின் பலனை அனுபவிக்கிறார்.

வெற்றி பெற பல தடைகள் வந்தாலும் அதை உடைத்தெறிந்து விட்டுச் சென்றால் தான் நம்முடைய நோக்கம் நிறைவேறும். சமுதாயம் வெற்றி பெற்றவர்களையே நினைவில் வைத்திருக்கும். இக்கதையின் வழியாக சாண்டியாகோவில் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் தொழில் திறமையையும் உணர்ந்து கொண்டாடுவோம்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பதை நமக்கு உணர்த்துகின்றது.

**3. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?**

சாண்டியாகோ முயற்சிக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தவர் .அதனால் அவரை ஒரு சாதனை மனிதர் என்றே கூறலாம். முதிர்ந்த வயதிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். முயற்சி ஒன்றையே முழு மூச்சாகக் கொண்டு செயல்பட்டவர். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் முடியும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வெற்றியும் கண்டவர். "வயதிற்குத்தான் முதுமை உண்டு மனதிற்கு அல்ல" என்ற எண்ணத்தோடும் செயல்பட்டு இறுதியில் வெற்றியும் கண்டார்.

## ★ மதிப்பீடு ★

**1. கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக கூறுக.**

**சாண்டியாகோ (கிழவன்):**

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலமாகும் இதில் வாழும் மக்கள் மீனவர்கள் அமீன் அவர்களுக்கு வற்றாத செல்வமாக விளங்குபவள் அன்னை அவர் வயது முதிர்ந்தவர் அவரிடம் மீன் பிடிக்க கற்றுக் கொள்வதற்காக மனோவின் எனும் சிறுவன் வருகிறான். முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் நீர் இல்லாமல் திரும்ப மாட்டார். ஆனால், கடந்த எண்பது நான்கு நாட்களாக ஏனோ அவருக்கு ஒரு மீன் கிடைக்கவில்லை முதல் 40 நாட்களும் அவருடன் கடலுக்குச் சென்ற அவன் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததோடு பேச்சுத் துணையாக இந்த அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படையெடுத்து


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



ஆகிவிட்டார். அவனது பெற்றோர் இப்போதெல்லாம் தனியாகவே மீன்பிடிக்கச் செல்கிறார் சாண்டியாகோ.

**முயற்சி வென்றது:**

எண்பத்து ஐந்தாம் நாளும் தனியாக மீன் பிடிக்கச் சென்றார் சாண்டியாகோ. தனக்கு மீன் பிடிக்கத் தெரியாது என்று மக்கள் நினைக்கின்றார்கள். அதை மாற்றிக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் கடலுக்குள் சென்று இரவு முழுவதும் பாடுபட்டும் ஒரு மீன் கூட பிடிபடவில்லை. பொழுதும் விடிந்தது .அவர் மனதில் ஒரு போராட்டம். மீன் பிடிக்காமல் கரைக்குத் திரும்பப் போவதில்லை என்ற முடிவு செய்தார். நண்பகல் வேளையும் ஆனது .அவர் இட்டிருந்த தூண்டில் மெதுவாக அசைந்தது அவர் மனது மிக்க மகிழ்ச்சி அடைந்தது .தூண்டில் கயிற்றை இழுக்கின்றார் அவரால் இழுக்க முடியவில்லை. ஆகவே, பெரிய மீன் தான் சிக்கியுள்ளது என்பதை உணர்ந்து பல போராட்டங்களுக்கு மத்தியில் அதை மேலே இழுத்து, நான் வைத்திருந்த ஈட்டியால் கொள்கிறார். மீன் இறந்து விடவே அதை படகில் வைக்க முடியாது என்று உணர்ந்து அதைப் படகோடு சேர்த்து கட்டினார். கட்டிய பிறகு கரையை நோக்கி வரும் வழியில் மீனைத் தின்று விட வேண்டும் என்ற ஆசையில் பல சுறாக்கள் மீனைச் சுற்றி வட்டம் விட்டது. அதைக்கண்ட சாண்டியாகோ சுறாவை வீழ்த்தி இறுதியாக கரைக்கு வந்து படகை ஒரு கம்பத்தில் கட்டி வைத்து படகையும் மீனையும் பார்க்கின்றார். சுறாக்கள் தின்றது போக தலையும் எலும்பும் மட்டுமே மிஞ்சி இருந்தது .கவலையுடன் தன் வீட்டிலிருந்த சாண்டியாகோவைக் காண மனோலின் வந்தான். தாத்தா எவ்வளவு பெரிய மீனைப் பிடித்து இருக்கிறாய். இனி உன்னை யாரும் பழித்து பேச முடியாது. உன் முயற்சி வென்றுவிட்டது இனி நான் உன் கூட தான் மீன்பிடிக்க வருவேன். உன்னிடம் நிறைய கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்று மனோலின் கூறுவதைக் கேட்டதும் சாண்டியாகோவிற்கு ஆறுதலாக இருந்தது. சாண்டியாகோ தன் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது என மனம் மகிழ்ந்தார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




கற்கண்டு

இயல் இரண்டு

# முதலெழுத்தும் சார்பெழுத்தும்

7CRJS5

## மனவரைபடம்




## கற்பவை கற்றபின்

**1. முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் தொடர்பைப் பற்றி விவாதிக்க.**

- முதல் எழுத்துகள் உயிரும் மெய்யும் ஆகிய முப்பது எழுத்துகளும் ஒரு குடும்பத்தில் பெற்றோர் போன்றவையாகும். இவை பிற எழுத்துகள் தோன்ற, இயங்கக் காரணமாக அமைகின்றன.
- சார்பெழுத்துகள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளைப் போன்றவையாகும். இவை முதல் எழுத்துகளைச் சார்ந்தே வருபவை ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



**2. முதல் எழுத்துகள் மட்டும் இடம் பெறும் சொற்களை எழுதுக.**

(எ.கா). ஆம்.

அன், ஆண்,ஏன், என், உன், உண், ஊர், ஏர், ஓர், ஊழ், எண்.

**3. முதல் எழுத்துகள் இடம் பெறாத சொற்களை எழுதுக.**

(எ.கா) குருவி.

கருவி, கவிதை, காலை, மாலை, கதை, காடை, பாதை, தேனி, யானை, புலி, கரடி, ஞாயிறு, நிலா, பெருமை, சிறுமை, பாரதி, கவிமணி, சுரதா, நாடு, மாடு, செடி, கொடி, மாடு, வீடு, பூனை, நரி, பாரி, நிலா.

## ★ மதிப்பீடு ★

**1. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

உயிரெழுத்துகள் 12 மெய்யெழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை அமைவதால் இவற்றை முதல் எழுத்துகள் என்று கூறுகிறோம்.

**2. சார்பெழுத்துகள் எத்தனை ?அவை யாவை?**

- சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.
- அவை, உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

**3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம் பெறும்?**

- ஆய்த எழுத்து தனக்கு முன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப் பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்று சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- இவை தனித்து இயங்காது.

## ★ சிந்தனை வினா ★

**1. உயிர்மெய், ஆய்தம் இவை இரண்டும் சார்பு எழுத்துகளாகக் கூறப்படக் காரணம் தருக.**

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன. முதலெழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்துகளுள் ஒன்றாகும்.
- ஆய்தம் தனக்கு முன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப் பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனித்து இயங்காது. முதல் எழுத்துகளாகிய உயிரையும் மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்தாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. எழுத்துகள் --------வகைப்படும். **விடை:** இரண்டு.
2. முதலெழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் --------------- **விடை:**சார்பெழுத்துகள்.
3. சார்பெழுத்துகள்---------- வகைப்படும். **விடை:**பத்து.

### குறு வினா

**1. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

எழுத்துகள் இரண்டு வகைப்படும். அவை முதல் எழுத்துகள், சார்பெழுத்துகள்.

**2. ஆய்தத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்களைக் கூறுக.**

- முப்புள்ளி
- தனிநிலை
- முப்பாற்புள்ளி
- அஃகேனம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




இயல் இரண்டு

வாழ்வியல்

# திருக்குறள்

7D1FTS

## மனவரைபடம்





## நுழையும் முன்




மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டிகளாக அமைபவை அறநூல்கள். அறநூல்களில் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் சிறப்புப் பெற்றது நம் திருக்குறள். திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் திருக்குறளைப் பயிலுவோம்; வாழ்வில் பின்பற்றுவோம்.

## நூல்வெளி





திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ________
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய சொல்
2. ஒருவர்க்குச் சிறந்த அணி ________
   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

**1. விடை:** (ஆ) அறிவுடைய மக்கள்.

**2. விடை:** (இ) இன்சொல்.

### ★ பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக ★

1. இனிய ___________ இன்னாத கூறல்
   கனியிருப்பக் ________ கவர்ந் தற்று
2. அன்பிலார் _________ தமக்குரியர் அன்புடையார்
   ________ உரியர் பிறர்க்கு

**1. விடை:** உளவாக / காய்.

**2. விடை:** எல்லாம் / என்பும்.

### ★ நயம் அறிக ★

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

இந்த குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

**எதுகை சொற்கள்:**

செயற்கரிய
செயற்கரிய

**மோனைச் சொற்கள்:**

செயற்கரிய --- செய்வார்
செயற்கரிய--- செய்கலா

### பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து ★ எழுதுக ★

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். ”என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்” என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

**விடை:** (ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

## ★ குறு வினாக்கள் ★

**1. உயிருள்ள உடல் எது?**

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும்தான்.

**2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?**

அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமையும்.

**3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

## கூடுதல் வினாக்கள்

**1. மழையின் தன்மை எத்தகையது?**

★ மழை உரிய காலத்தில் பெய்யாது போனால் உலகத்து உயிர்களையெல்லாம் பசி துன்புறுத்தும்.
★ உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான்.
★ உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

**2. தாய் எப்போது பெரு மகிழ்ச்சி அடைவாள்?**

தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்வை விட பெருமகிழ்ச்சி அடைவாள்.

**3. ஒருவருக்கு எது அணி?**

பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணி ஆகும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## மொழியை ஆள்வோம்

**(அ) கேட்டும் கண்டும் அறிந்தும் மகிழ்க.**

1. இயற்கை சார்ந்த பாடல்கள், கதைகள், உரைகளைக் கேட்டு மகிழ்க.
2. பறவைகள், விலங்குகளின் வாழ்க்கை முறை பற்றிய காணொலிக் காட்சிகளைக் கண்டு மகிழ்க.

---

**(ஆ) உமது ஊரின் இயற்கை வளம் பற்றி பேசுக.**

எங்கள் ஊரின் பெயர் திருவில்லிபுத்தூர். தமிழ்நாடு அரசின் சின்னமாக விளங்கக்கூடிய ஆண்டாள் கோதை நாச்சியார் திருக்கோபுரம் விளங்குகிறது. மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் செண்பகத்தோப்பு காட்டழகர் கோவில், அய்யனார் அருவி, சதுரகிரி மலை ஆகியவை அருமையாக இயற்கை வளத்துடன் அமைந்துள்ளன. அங்கு உள்ள அருவிகள் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியைத் தருகின்றன. அங்கு மாமரம், பலாமரம் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. எங்கள் பகுதிகளில் நன்செய் பயிர்களாக நெல்,கரும்பு வாழை முதலியன பயிரிடப்படுகின்றன. புன்செய் பயிர்கள் எள், கம்பு ,கேழ்வரகு, துவரை, பருத்தி, கொள்ளு முதலியவை பயிரிடப்படுகின்றன. இங்கு மழை அளவு போதுமான அளவாக உள்ளது. மலைப்பகுதி அருகில் உள்ளதாலும் மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுவதாலும் மழைப்பொழிவு போதுமான அளவாக அமைந்துள்ளது.

---

**(இ) கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த கொடைகள்.

இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் நமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பாது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் மட்டுமே நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

**வினா :**

1. எதனை இயற்கை என்கிறோம்?
2. இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?
3. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?
4. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



**விடை:**

1. இயல்பாகவே தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம்.
2. பனிபடர்ந்த நீல மலைகள், பாடித் திரியும் பறவைகள், சலசலக்கும் ஓடை, கண்சிமிட்டும் விண்மீன்கள், தன்னிச்சையாக சுற்றித்திரியும் விலங்குகள், ஆர்ப்பரித்து விழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல் இவையெல்லாம் இயற்கையை வருணிக்கும் சொற்கள்.
3. இயற்கையை பாதுகாக்காவிட்டால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயம் ஆகிறது. உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்.
4. இயற்கையின் அழகு.

---

**(ஈ) ஆசிரியர் கூறக்கேட்டு எழுதுக.**

| | | |
|---|---|---|
| மாமழை | வான்சிறப்பு | முரல் மீன் |
| வலசை போதல் | பறவை இனங்கள் | சார்பு எழுத்துகள் |
| சாண்டியாகோ | தோற்கடிக்க முடியாது | காணிநிலம் |

## கீழ்க்கண்ட தலைப்பில் கட்டுரை எழுதுக

### இயற்கையைக் காப்போம்.

**குறிப்புச் சட்டகம் :**

முன்னுரை

இயற்கைச் சூழல்

இயற்கை மாசுபாடு

இயற்கையை நேசியுங்கள்

முடிவுரை

**முன்னுரை :**

இயற்கை என்பது இயல்பாகவே உருவானவை. இயற்கையாய் உருவான நிலம், நீர், தீ, காற்று, வானம் என ஐம்பூதங்களால் ஆனது. இவ்வுலகம் இத்தகைய சிறப்பு வாய்ந்த இயற்கையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என இக்கட்டுரையில் காண்போம்.

**இயற்கைச்சூழல் :**

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களுமே இயற்கையைச் சார்ந்தே வாழ்கின்றன. எனவே, இயற்கையைக் காப்பது மிக அவசியமாகும். இயற்கை மருத்துவம், இயற்கை வேளாண்மை, இயற்கை உணவு என வாழவேண்டும்.

**இயற்கை மாசுபாடு :**

இன்றைய நவீன வாழ்க்கை முறைகளால் இயற்கை மாற்றமடைகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் காடுகளையும், விளைநிலங்களையும் அழித்து வீடுகளாக்கினோம். தொழிற்சாலைக் கழிவுகளினால் நீரை மாசுபடுத்தினோம். நெகிழிப் பொருட்களை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி நிலத்தை மாசுபடுத்தினோம். வளரும் பிள்ளைகள் நோய்களோடு வளர்வதற்கு நாமே காரணமாகின்றோம்.

**இயற்கையை நேசியுங்கள் :**

நாம் அனைவரும் நாட்டை வளமாக்கப் பாடுபடுவோம். காடுகளை அழிக்காமல் மலைகளைத் தகர்க்காமல், மண்வளத்தைச் சுரண்டாமல் நீர்நிலைகளைப் பாதுகாத்து வேளாண் தொழிலைக் காப்போம். இயற்கையை நேசிப்போம்.

**முடிவுரை :**

இயற்கையின் பயனையும், இன்பத்தை எதிர்காலத் தலைமுறையினர் கண்டு அனுபவிக்கவும் நாம் உறுதுணையாக இருப்போம்.

இயற்கையைக் காப்போம்!

எதிர்காலம் சிறக்க வழிசெய்வோம்!

---

## மொழியோடு விளையாடு

**திரட்டுக:**

**(அ) கடல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களைத் திரட்டுக**

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பரவை, புணரி, பௌவம்.

**(ஆ) தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக**

(எ.கா) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

1. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.
2. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

**விடை:**

1. கபிலன் வேலை செய்தான். கபிலன் களைப்பாக இருக்கிறான்.
2. இலக்கியா இனிமையாகப் பாடினாள். இலக்கியா பரிசு பெற்றாள்.

**(இ) பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் __________ என்று பெயர். (பறவை / பரவை)
2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக __________ ஆற்றினார். (உரை / உறை)
3. முத்து தம் __________ காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)
4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை __________ (அலைத்தாள் / அழைத்தாள்)

**விடை:**

1. பரவை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



2. உரை.
3. பணி.
4. அழைத்தாள்.

## (ஈ) பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக

1. 'புள்' என்பதன் வேறு பெயர் - | | | |
2. பறவைகள் இடம்பெயர்தல் - | | | | | | |
3. சரணாலயம் என்பதன் வேறு பெயர்- | | | | | |

**விடை:**

1. பறவை
2. வலசைபோதல்
3. புகலிடம்

## (உ) வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.
2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.
4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

**விடை:**

1. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
2. பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.
3. சாண்டியாகோ மிகப் பெரிய மீனைப் பிடித்தார்.
4. இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி.

## (ஊ) கட்டங்களில் சில சொற்கள் மறைந்துள்ளன. குறிப்புகளைக் கொண்டு அவற்றைக்கண்டுபிடித்து எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | த் | த | மி | ழ் | கா |
| ப் | பை | னி | மே | ம | ணி |
| ப | ல் | நி | ல | வு | நி |
| து | ட | லை | ர் | ப | ல |
| லை | க | மே | ணி | ம | ம் |
| செ | ங் | கா | ல் | நா | ரை |

1. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று ______________
2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ______________
3. திங்கள் என்பதன் பொருள் ______________
4. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை ______________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



5. பாரதியார் ____________________ வேண்டும் என்று பாடுகிறார்.
6. ஆய்த எழுத்தின் வேறு பெயர் ____________________

**விடை:**

1. மணிமேகலை
2. முப்பது
3. நிலவு
4. செங்கால் நாரை
5. காணி நிலம்
6. தனிநிலை

## (எ) ஆய்ந்தறிக

**பெருகிவரும் மக்களின் தேவைக்காக இயற்கையை அழிப்பது சரியா? இயற்கையைச் சுரண்டாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்ற மாற்று வழிகள் உண்டா?**

- பெருகி வரும் மக்களின் தேவைக்காக இயற்கையை அழிப்பது மிகப்பெரிய தவறாகும்.
- இதற்கான மாற்று வழிகள்மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட வேண்டும். நிலம், நீர் ,காற்று ஆகியவற்றை மாசுபடுதலைத் தவிர்த்தல் வேண்டும். திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தலைத் தவிர்த்தல் வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் வகையில் அமைக்க வேண்டும். வாகனங்களில் ஏற்படும் புகை களைக் கட்டுப்படுத்த கருவிகளைப் பொருத்துதல் வேண்டும். சாக்கடை மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரினை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல் வேண்டும். மேற்கூறிய அனைத்தையும் சரிவரச் செய்தால் இயற்கையைச் சுரண்டாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்ற நல்ல மாற்று வழி உண்டாகும் என்பது திண்ணம்.

## கவிதை படைக்க

**கீழே காணப்படும் மழை பற்றிய கவிதையைச் சொந்தத் தொடர்களால் நிரப்புக.**

வானில் இருந்து வந்திடும்
மனதில் மகிழ்ச்சி தந்திடும்
நிலத்தடிநீரைப் பெருக்கிடும்
மனித வாழ்வை உயர்த்திடும்
எங்கும் வளமை பொழிந்திடும்

## நிற்க அதற்குத் தக

என் பொறுப்புகள் ...

அ) சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வேன்
ஆ) இயற்கையைப் பாதுகாப்பேன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## கலைச் சொல் அறிவோம்

கண்டம் – Continent தட்பவெப்பநிலை – Climate வானிலை – Weather
வலசை – Migration புகலிடம் –Sanctuary புவிஈர்ப்புப்புலம் – Gravitational Field

## இணையத்தில் காண்க

அழிந்து வரும் உயிரினங்கள் பற்றி இணையத்தில் தேடி அறிந்து பட்டியலிடுக
செயல்பாட்டிற்கான உரலி : http://globeofbirdmigration.com/

# இயல் 2

## அலகுத்தேர்வு-1

### (கவிதைப் பேழை)

**மொத்த மதிப்பெண்கள்:25**

**I. நிரப்புக:** **4 x 1= 4**

1. தார் ............சூடுவது ஆகும்.
2. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.....................
3. கிணறு என்பதைக் குறிக்கும் சொல்............
4. நான்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது..............

**II. நயம் அறிக.** **1**

5. பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்
பக்கத்திலே வேணும் -நல்ல
முத்துச்சுடர் போலே நிலாவொளி
முன்பு வரவேணும்.

**III. அடிபிறழாமல் எழுதுக:** **10**

6. திங்களைப் போற்றுதும்....... எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடல்.

**IV. பொருத்துக :** **4 x 1=4**

| | | |
|---|---|---|
| 7. முத்துச்சுடர் போலே | --- | (அ)நிலவு. |
| 8. தூய நிறத்தில் | --- | (ஆ)தென்றல். |
| 9. சித்தம் மகிழ்ந்திட | --- | (இ) நிலா ஒளி. |
| 10. திங்கள் | --- | (ஈ) மாடங்கள். |

**V. குறு வினா:** **3 x 2=6**

11. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
12. இயற்கை போற்றத்தக்கது ஏன்?
13. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் 2

## அலகுத்தேர்வு-2

### (உரைநடை உலகம்,விரிவானம்)

**மொத்த மதிப்பெண்கள்:25**

**I. நிரப்புக:** **5 x 1=5**

1. காக்கைகுருவி எங்கள் ஜாதி என்று பாடியவர்............
2. சிட்டுக்குருவியின் வாழ்நாள்............. ஆண்டுகள் ஆகும்.
3. இந்தியாவின் பறவை மனிதர்................
4. தட்பவெப்பம் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்...............
5. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை...........

**II. சொற்றொடரில் அமை:** **1**

6. வாழ்நாள்

**III. பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக:.** **1**

7. மரங்களைவளர்த்து..........யைக் காப்போம் ..........உரங்களைத் தவிர்த்து நில வளம் காப்போம்.(செயற்கை / இயற்கை)

**IV. குறு வினா:** **2 x 2=4**

8. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
9. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

**V. சிறுவினா:** **2 x 3=6**

10. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
11. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள்அறிந்தவை யாவை?

**VI. விரிவானம்.** **2 x 4=8**

12. கிழவனும் கடலும் படக்கதையை உங்கள்சொந்த நடையில் கதையாகக் கூறுக.
13. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் 2

## அலகுத்தேர்வு-3

**(கற்கண்டு,மொழி ஆள்வோம், மொழியோடு விளையாடு)**

**மொத்த மதிப்பெண்கள்:25**

**I. நிரப்புக:** **5 x 1=5**

1. சார்பெழுத்துகள்........ வகைப்படும்.
2. எழுத்துகள் ......வகைப்படும்.
3. "தனிநிலை" என்று கூறப்படும் எழுத்து..........
4. இரட்டைக் காப்பியங்கள்.........
5. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை...........

**II. நயம் அறிக:** **1**

6. "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

**III. அடிபிறழாமல் எழுதுக:** **4**

7. (அ)"மழை" என முடியும் குறள்.
(ஆ)"இனிய....." எனத் தொடங்கும் குறள்.

**IV. குறு வினா:** **4 x 2=8**

8. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
9. முதல் எழுத்துகள்என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
10. எழுத்துகளுக்கு தொடக்கமாக அமைவது எது?
11. அன்பிலார் ,அன்புடையார் செயல்கள் யாவை?

**V. மொழிப் பயிற்சி:** **7**

**12. கலைச்சொல் அறிக:** **1**

(அ) Continent. (ஆ)Sanctuary

**13. வரிசை மாறியுள்ள சொற்களை சரியான வரிசையில் அமைத்து எழுதுக.** **2**

(அ)இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.

(ஆ)மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.

**14. ஒரு சொற்றொடரை இரு தொடர்களாக மாற்றுக:** **1**

பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

**15. பொருத்தமான சொற்களால் கட்டங்களைநிரப்புக:** **2**

(அ)பறவைகள் இடம் பெயர்தல் ...................

(ஆ)சரணாலயம் என்பதன் வேறு பெயர்.................

**16. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **1**

(அ) பரந்து விரிந்து இருப்பதால்கடலுக்குப் ............ என்று பெயர். (பறவை /பரவை).




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் மூன்று

# எந்திர உலகம்



**கற்றல் நோக்கங்கள்**

- எதையும் காரண காரியத்துடன் அறிந்து கொள்ள முயலுதல்
- அறிவியல் மனப்பான்மை பெறுதல்
- நம் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு எவையெல்லாம் தேவை என அறிதல்
- அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவாதித்தல்
- வளர்ந்துவரும் அறிவியல், தொழில் நுட்பங்கள் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் பெறுதல்
- தமிழில் பிழையின்றி எழுதுதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




கவிதைப்பேழை

இயல் மூன்று

# அறிவியல் ஆத்திசூடி

7DJ7X3

## மனவரைபடம்




## நுழையும் முன்




ஆத்திசூடி என்பது அகர வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம். ஔவையின் ஆத்திசூடியை நாம் அறிவோம். பாரதியார் 'புதிய ஆத்திசூடி' என்று காலத்திற்கேற்ற அறிவுரைகளைக் கூறினார். அகர வரிசையில் அறிவியல் அறிவோம்; அகில உலகையும் ஆய்வு செய்வோம்; அனைத்தையும் உலகின் நலத்திற்கு வழங்குவோம்!

## நூல்வெளி



"தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்" என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை சு. முத்து, இவர் அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர். விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர். அறிவியல் கவிதைகள், கட்டுரைகள் பலவற்றைப் படைத்துள்ளார். எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அறிவியல் ஆத்திசூடி என்னும் நூலின் ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## சொல்லும் பொருளும்

இயன்றவரை - முடிந்தவரை
ஒருமித்து - ஒன்றுபட்டு
ஔடதம் - மருந்து

## கற்பவை கற்றபின்

**1. 'அறிவியல் ஆத்திசூடி' பகுதியில் உங்களுக்குப் பிடித்த அடியை எழுதி அதன் காரணத்தைக் கூறுக.**

எனக்குப் பிடித்த அடி:
'ஒய்வுற உழை'
"உழைப்பே உயர்வுதரும்",
உழைப்பவன் அழகன்
உழைப்பவன் உலகிற்கு அன்மையாவான்.

வாழ்வில் மென்மேலும் உயரவேண்டும் என்றால் தொடர்ந்து உழைக்க வேண்டும். "இன்றிளைப்பாறுவோம் என்றிருந்தால் வழி என்னென்னவாகும் ஓரிரவில், சென்று இளைப்பாறுக முற்றிடத்தே" தம்பி தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே ! என்று சாலை. இளந்திரையன் கூற்றுப்படி நாளும் உழைப்போம் ; வாழ்வில் வளம் பெறுவோம்.

**2. அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கத் தொடர்கள் ஐந்து உருவாக்குக.**

(எ.கா) அறிவியலை வளர்ப்போம் !
உலகை வெல்வோம் !

★ இணையத்தில் உலகம் இணைப்போம் !
இதயங்களை இணைப்போம் !
★ அணுவைப் பிளந்திடுவோம் !
அணுசக்தியைப் பெற்றிடுவோம் !
★ உலகத் தொழிலனைத்தும் !
உவந்து செய்திடுவோம் !
★ கணினியை உருவாக்கிடுவோம் !
காலத்தினை வென்றிவோம் !

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. உடல் நோய்க்கு ________ தேவை.
அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



2. நண்பர்களுடன் ________ விளையாடு

   அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

3. 'கண்டறி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) கண் + அறி ஆ) கண்டு + அறி இ) கண்ட + அறி ஈ) கண் + டறி

4. 'ஓய்வுற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) ஓய்வு + அற ஆ) ஓய் + அற இ) ஓய் + வற ஈ) ஓய்வு + வற

5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) ஏன்என்று ஆ) ஏனென்று இ) ஏன்னென்று ஈ) ஏனன்று

6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம் இ) ஔடதாம் ஈ) ஔடதஆம்

**விடைகள்**

1. விடை : (அ) ஔடதம்
2. விடை : (அ) ஒருமித்து
3. விடை : (ஆ) கண்டு + அறி
4. விடை : (அ) ஓய்வு + அற
5. விடை : (ஆ) ஏனென்று
6. விடை : (அ) ஔடதமாம்

## ★ எதிர்ச்சொற்களைப் பொருத்துக ★

1. அணுகு - (அ) தெளிவு
2. ஐயம் - (ஆ) சோர்வு
3. ஊக்கம் - (இ) பொய்மை
4. உண்மை - (ஈ) இலகு

விடை: 1 - (ஈ) 2 - (அ) 3 - (ஆ) 4 - (இ)

## ★ பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக ★

1. சிந்தனை கொள் அறிவியல

   ________________

2. சொல் தெளிந்து ஐயம்

   ________________

3. கேள் ஏன் என்று

   ________________

4. வெல்லும் என்றும் அறிவியலே

   ________________

1. விடை : அறிவியல் சிந்தனைகொள்
2. விடை: ஐயம் தெளிந்து சொல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



3. விடை: ஏன் என்று கேள்
4. விடை : என்றும் அறிவியலே வெல்லும்

## ★ குறு வினா ★

**1. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?**

அறிவியலால் பெறும் அனுபவ அறிவே மனிதர்களுக்கு மருந்தாக விளங்குகிறது.

## ★ சிறுவினா ★

**1. பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

✶ அறிவியலின் மீது ஆர்வம் கொண்டு, சிந்தனை செய்து, பொதிந்துள்ள அரிய தகவல்களை அறிய ஆய்வில் மூழ்க வேண்டும்.

✶ அறிவியல் கருத்துகளை முடிந்தவரை புரிந்துகொண்டு. எச்செயலையும் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்.

✶ அறிவியலின் உண்மையைக் கண்டறிந்து வெளிப்படும்போது நமக்கு ஏற்படும் ஊக்கமே வெற்றி தரும்.

✶ என்றும் அறிவியலே வெல்லும் என்பதை உணர்ந்து, ஏன் என்று வினாக்களைக் கேட்டு, ஐயமின்றித் தெளிவாகக் கூற வேண்டும்.

✶ அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு ஓய்வில்லாமல் உழைத்தால் அந்த உழைப்பே நமக்கு மருந்தாய் அமையும். இதுவே நமக்கு ஓர் அனுபவமாகும்.

## ★ சிந்தனை வினா ★

✶ சித்த மருத்துவம்
✶ ஆயுர்வேத மருத்துவம்
✶ யுனானி மருத்துவம்
✶ ஓமியோபதி மருத்துவம்
✶ அலோபதி மருத்துவம்
✶ மூலிகை மருத்துவம்
✶ அக்கு பஞ்சர் மருத்துவம்
✶ மனநல (உளவியல்) மருத்துவம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




## இயல் மூன்று

கவிதைப்பேழை

# அறிவியலால் ஆள்வோம்

**மனவரைபடம்**




## நுழையும் முன்




அறிவியல் ஆய்வுக்கு எல்லை இல்லை. மண்ணில், விண்ணில், கடலில், காற்றில் என எங்கும் ஆய்வுகள் நிகழ்கின்றன. மனிதனின் நகலாக எந்திர மனிதனை மனிதரே படைக்கின்றனர். மனித உடலின் பாகங்களையும் இயந்திரத்தின் பாகங்கள் போல் மாற்றுகின்றனர். கோள்கள் இனி நமக்குத் தொலைவு இல்லை. நேற்றைய மனிதன் நினைத்துப் பார்க்காத பலவற்றை இன்றைய மனிதன் நிகழ்த்திக் காட்டுகிறான். இன்றைய மனிதனின் கனவுகளை நாளை நாம் நனவாக்குவோம் வாருங்கள்!

## பாடலின் பொருள்

- மனிதன் ஆழ்கடலுக்கு உள்ளேயும் சென்று ஆய்வுகள் செய்கின்றான். நீல வானத்தின் மேலே பறந்து நிலவில் சென்றும் வாழ நினைக்கிறான்.
- வானத்தில் செலுத்தப்படும் செயற்கைக்கோள்கள் உதவியுடன் செய்தித் தொடர்பில் சிறந்துள்ளான். இயற்கை வளங்களையும் புயல், மழை ஆகியவற்றையும் கண்டறிந்து கூறுகிறான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



- எலும்பும் தசையும் இல்லாமல் செயல்படும் எந்திர மனிதனையும் படைத்துவிட்டான். இணையவலையின் உதவியால் உலகத்தையே நம் உள்ளங்களையில் கொடுக்கின்றான்.
- பாதிக்கப்பட்ட உடலுறுப்புகளை மாற்றிப் பொருத்தி உடலையும் உயிரையும் காக்க வழிவகை செய்துவிட்டான். அணுவைப் பிளந்து ஆற்றலை எடுத்து அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறான்.
- நாளைய மனிதனோ விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். அங்குச் சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான்.

## கற்பவை கற்றபின்

**1. 'அறிவியலால் ஆள்வோம்' கவிதையை உரிய ஓசையுடன் படிக்க.**

**2. உங்களைக் கவர்ந்த அறிவியல் சாதனங்கள் நான்கினை எழுதுக.**

அலைபேசி , தொலைக்காட்சி, கணினி,இணையதளம்

**3. "அலைபேசியால் நன்மையே" என்னும் தலைப்பில் வகுப்பில் கலந்துரையாடல் செய்க.**

பாலா : வணக்கம் குமரா !

குமரன் : வணக்கம் பாலா !

பாலா : நாம் பயன்படுத்தும் அலைபேசியால் நன்மையா? தீமையா?

குமரன் : நன்மையே அதிகம்

பாலா : அது எப்படி?

குமரன் : அறிவியல் கண்டுபிடிப்புகளில் மிகவும் மகத்தான ஒன்று அலைபேசி, கையடக்கமானது. தொலைவில் உள்ளவரிடம் நேரிடையாகக் கண்டு பேசலாம். நம் பாடம் சார்ந்த செய்திகளை அறியவும், சந்தேகத்தை நிவர்த்தி செய்யவும் உதவுகிறது. இணைய வழியில் பாடம் கற்பிக்க மிகவும் உறுதுணையாக உள்ளன. அலைபேசியை தேவைக்குப் பயன்படுத்த வேண்டும். தேவற்றவைகளைப் பார்க்காமல் இருந்தாலே நமக்கு அலைபேசியால் நன்மையே உண்டு பாலா.

பாலா : அருமை! அருமை! நன்றி குமரா!

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. மனிதன் எப்போதும் உண்மையையே ______

அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான்

இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

2. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ) ஆழமான+ கடல் ஆ) ஆழ் + கடல்

இ) ஆழ + கடல் ஈ) ஆழம் + கடல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) விண் + வளி ஆ) விண் + வெளி
   இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி
4. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) நீலம்வான் ஆ) நீளம்வான்
   இ) நீலவான் ஈ) நீலவ்வான்
5. இல்லாது+ இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______
   அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாதஇயங்கும்
   இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்

1. விடை : (அ) உரைக்கின்றான்
2. விடை : (ஈ) ஆழம் + கடல்
3. விடை : (ஆ) விண் + வெளி
4. விடை : (இ) நீலவான்
5. விடை : (இ) இல்லாதியங்கும்

---

**1. பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.**

**அடி மோனை**

| | | | |
|---|---|---|---|
| ஆழக்கடலின் | நீல வானில் | செயற்கைக் | எலும்பும் |
| ஆய்வுகள் | நிலவில் | செய்தித் | எந்திர |
| உறுப்பை | அணுவைப் | நாளை | |
| உடலும் | அனைத்தும் | நகரம் | |

**சீர் மோனை**

| | |
|---|---|
| ஆழக் - அடியில் | நிலவில் - நினைக்கின்றான் |
| உடலும் - உயிரும் | அணுவைப் - ஆற்றலை |

---

**2. பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.**

**அடி எதுகை**

| | | |
|---|---|---|
| நீல | செயற்கை | நாளை |
| நிலவில் | இயற்கை | வேளை |

---

**3. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக.**

**அடி இயைபு**

| | | |
|---|---|---|
| பார்க்கின்றான் | சிறக்கின்றான் | படைக்கின்றான் |
| நினைக்கின்றான் | உரைக்கின்றான் | கொடுக்கின்றான் |
| காக்கின்றான் | வாழ்ந்திடுவான் | |
| பார்க்கின்றான் | அமைத்திடுவான் | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## ★ சிறுவினா ★

**1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?**

* ✶ வானத்தில் மனிதன் செலுத்தப்படும் செயற்கைக் கோள்கள் உதவியுடன் செய்தித் தொடர்பினை அறியப் பயன்படுகிறது.
* ✶ இயற்கை வளங்களையும், புயல், மழை ஆகியவற்றைக் கண்டறியவும் பயன்படுகிறது.

**2. நாளை மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?**

* ✶ நாளைய மனிதனோ விண்ணிலுள்ள தோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான்.
* ✶ விண்ணிலுள்ள கோள்களுக்குச் சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான்.

## ★ சிந்தனை வினா ★

**1. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக.**

* ✶ உலகில் ஏற்படும் புதிய புதிய உயிர்க்கொல்லி நோய்களை அழிப்பதற்கு மருந்துகள் தேவை.
* ✶ இயற்கைப் பேரிடர்களிலிருந்து தப்பிக்க முன்கூட்டியே அறிந்து தங்களைக் காப்பாற்ற புதிய கண்டுபிடிப்புகள் தேவை.
* ✶ ஆழ்கடலை ஆய்வு செய்வதற்கும் கோள்கள் பற்றி ஆய்வு செய்வதற்கும் தேவை.
* ✶ மனிதனின் வாழ்நாளினைப் பெருக்கவும், வேளாண்மையைப் பெருக்கவும் தேவை.
* ✶ நதிநீரினை இணைப்பதற்கு எளிய வழிமுறையைக் கையாள புதிய கண்டுபிடிப்புகள் தேவை.

**2. இதுவரை எத்தனை கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?**

* ✶ இதுவரை ஒன்பது கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
* ✶ அவை, புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ.

**3. இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைக்கோள் எது?**

சந்திராயன் - I.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




இயல் மூன்று

உரைநடை உலகம்

# கணியனின் நண்பன்

7EKR4N

## மனவரைபடம்




## நுழையும் முன்




எல்லாம் எந்திரமயமாகி வருகிற காலம் இது. மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்களை எந்திரங்களைக் கொண்டு செய்யும் வகையில் பலவற்றை உருவாக்கி வருகிறார்கள். மனிதர்கள் செய்ய முடியாத பணிகளையும் எந்திரங்கள் செய்கின்றன. வீடு, அலுவலகம், தொழிற்சாலை, மருத்துவமனை என்று பல இடங்களிலும் எந்திரங்கள் பணியாற்றுகின்றன. கணக்குப்போடும் எந்திரம், கற்றுத்தரும் எந்திரம், வேலை செய்யும் எந்திரம் விளையாடும் எந்திரம் என்று எங்கெங்கும் எந்திரங்கள் எந்திர உலகில் நுழைவோம்! எல்லாவற்றையும் கற்போம்!

## கற்பவை கற்றபின்

**1. உங்களை ஓர் எந்திரமனிதனாகக் கற்பனை செய்துகொண்டு நண்பர்களுடன் உரையாடுக?**

| | | |
|---|---|---|
| எந்திரமனிதன் | : | வணக்கம் நண்பர்களே! |
| நண்பர்கள் | : | வணக்கம் எந்திர மனிதா! |
| எந்திர மனிதன் | : | என்ன ! விளையாடலையா? |
| நண்பர்கள் | : | விளையாடப் போகிறோம். நீயும் வருகிறாயா? உன்னால் விளையாட முடியுமா? |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| எந்திரமனிதன் | : | அருமையாக விளையாடுவேன். கால்பந்து விளையாடலாமா? |
| நண்பர்கள் | : | ம்..ம்..வா ! விளையாடலாம். பந்தை எடுத்து உதைத்துத்தள்ளு |
| எந்திர மனிதன் | : | ம்..ம்..(உதைத்தல்) |
| நண்பர்கள் | : | அருமை. அருமை. இந்த விளையாட்டு மட்டும் விளையாடுவாயா? இல்லை வேறு விளையாட்டெல்லாம் விளையாடுவாயா? |
| எந்திர மனிதன் | : | நான் எல்லா விளையாட்டும் விளையாடுவேன். |
| நண்பர்கள் | : | அப்படியா? மகிழ்ச்சி ! இனிமேல் விளையாடப்போகும் போது உன்னையும் அழைத்துச் செல்கிறோம். |
| எந்திர மனிதன் | : | மிக்க நன்றி நண்பர்களே! |

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ________
   அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு
2. தானே இயங்கும் எந்திரம் ________
   அ) கணினி ஆ) தானியங்கி இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி
3. 'நின்றிருந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) நின் + றிருந்த ஆ) நின்று + இருந்த
   இ) நின்றி + இருந்த ஈ) நின்றி + ருந்த
4. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) அவ்வு + ருவம் ஆ) அ + உருவம்
   இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம்
5. மருத்தும் + துறை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை
   இ) மருந்துதுறை ஈ) மருத்துவத்துறை
6. செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) செயலிழக்க ஆ) செயல்இழக்க இ) செயஇழக்க ஈ) செயலிலக்க
7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ________
   அ) போக்குதல் ஆ) தள்ளுதல் இ) அழித்தல் ஈ) சேர்த்தல்
8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ________
   அ) அரிது ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது

1. விடை : (ஆ) நுண்ணறிவு
2. விடை : (ஆ) தானியங்கி
3. விடை : (ஆ) நின்று + இருந்த
4. விடை : (ஆ) அ + உருவம்
5. விடை : (ஈ) மருத்துவத்துறை
6. விடை : (அ) செயலிழக்க
7. விடை : (ஈ) சேர்த்தல்
8. விடை:(அ)அரிது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## ★ கோடிட்ட இடங்களை நிரப்புக ★

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை ___________
2. தானியங்கிகளுக்கும், எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு_____
3. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ___________
4. "சோபியா" ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ___________

1. **விடை :** எந்திரங்கள்
2. **விடை :** செயற்கை நுண்ணறிவு
3. **விடை :** டீப்புளு
4. **விடை :** சவுதி அரேபியா

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக**

1. தொழிற்சாலை : சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன.
2. உற்பத்தி : தொழிற்சாலையில் தானியங்கி மூலம் உற்பத்தி செய்தல் பணியைச் செய்கின்றனர்.
3. ஆய்வு : எங்கள் பள்ளிக்கு கல்வித்துறையின் சார்பாகத் திடீரென ஆய்வு மேற்கொண்டனர்.
4. செயற்கை : எந்திர மனிதன் செயற்கையாக உருவாக்கப்பட்டதாகும்.
5. நுண்ணறிவு : நுட்பமாகச் சிந்தித்து அறிவது நுண்ணறிவு ஆகும்.

## ★ குறு வினா ★

**1. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?**

- ✶ காரல் கபெக் என்பவர் 'செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர். இவர் 1920 ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார். அதில் "ரோபோ" என்னும் சொல்லை முதல் முதலாகப் பயன்படுத்தினார்.
- ✶ "ரோபோ" என்ற சொல்லுக்கு "அடிமை" என்பது பொருள். ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாக அந்த நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இவ்வாறு ரோபோ என்னும் சொல் வழக்கத்திற்கு வந்தது.

**2. டீப்புளு - மீத்திறன் கணினி பற்றி எழுதுக?**

- ✶ 1997-இல் நடைபெற்ற சதுரங்கப் போட்டி ஒன்றில், உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ் கலந்து கொண்டார்
- ✶ ஐ.பி.எம் என்னும் நிறுவனம் உருவாக்கிய டீப்புளு அவருடன் போட்டியிட்டு வெற்றி வாகை சூட்டியது.

## ★ சிறுவினா ★

**1. எந்திரமனிதனின் பயன்பளை விளக்குக.**

- ✶ மனிதர்களைவிட மீத்திறன் மிக்கதாக இருப்பதனால், விரைவாகவும், விவேகமாகவும் செயல்பட முடிகின்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



- ✶ மனிதர்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் செய்ய எந்திரமனிதன் பயன்படுகிறான்.
- ✶ உணவகங்களில் உணவு பரிமாறுவதற்குப் பயன்படுகின்றான்.
- ✶ பொது இடங்களில் வழிகாட்டுவதற்குப் பயன்படுகின்றான்.
- ✶ வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்கின்றான்.
- ✶ விளையாட்டுத்துறையிலும் மருத்துவத்துறையிலும் முத்திரை பதித்து வருகின்றான்.
- ✶ மனிதனால் செல்லமுடியாத இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றான். பயம் அறியாதவன் இந்த எந்திரமனிதன்.

**2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?**

- ✶ வெப்பநிலை உறைநிலைக்கும் கீழ் உள்ள துருவப் பகுதிகள் மனிதர்கள் வாழ ஏற்ற சூழ்நிலை இருப்பதில்லை.
- ✶ இங்கு ஆய்வு செய்ய மனிதர்களைப் பயன்படுத்தினால் அவர்கள் பல உபாதைகளுக்கு ஆட்படுவர் அல்லது இறந்தும் போவர்.
- ✶ அப்படி நடந்தால் ஆய்வு பாதியில் நின்றுவிடும் முழுமையும் பெறாது. ஆனால், எந்திரமனிதர்கள் எந்தப் பருவநிலையிலும் இயங்கும் தன்மை பெற்றவர்கள்.
- ✶ இவர்களைப் பயன்படுத்தினால் ஆய்வு எந்தத் தடங்கலுமின்றி முழுமை பெறும். அதனால்தான் துருவப்பகுதியில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புகின்றனர்.

## ★ சிந்தனை வினா ★

**1. உங்களுக்கென ஓர் எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிறந்தது எழுதுக.**

- ✶ வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்துவேன்.
- ✶ என்னுடன் பேசி, பாடி விளையாடுவதற்கும் பயன்படுத்துவேன்.
- ✶ விவசாயம், மருத்துவம், அறிவியல், ஆய்வு, உளவு ஆகிய துறைகளுக்கும் சமூகம், விளையாட்டு, விண்வெளி, சுற்றுலா, பொறியியல், கணினி, கலை, கட்டிடம் மற்றும் உணவு உற்பத்தித் துறைக்கும் பயன்படுத்துவேன்.

## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. ‘செக்’ நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர் ________.

   **விடை : காரல் கபெக்**

2. ‘ரோபோ’ என்ற சொல்லுக்கு ________ என்பது பொருளாகும்.

   **விடை : அடிமை**

3. உலகச் சதுரங்க வெற்றியாளர் ________.

   **விடை : கேரி கேஸ்புரோவ்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



4. ஐ.பி.எம் என்னும் நிறுவனம் உருவாக்கிய மீத்திறன் கணினி ________.
   **விடை : டீப்புளூ**
5. செயற்கை நுண்ணறிவு கொண்டவை ________.
   **விடை : எந்திர மனிதன்**

---

இயல் மூன்று


விரிவானம்

# ஒளி பிறந்தது

அப்துல் கலாமுடன் நேர்காணல்

7F4I7Y

## மனவரைபடம்




## நுழையும் முன்




குழந்தைகளிடமும் மாணவர்களிடமும் மிகுந்த அன்பு காட்டியவர் மறைந்த மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம். மாணவர்கள் முன்னேற பல வழிகளை எடுத்துச் சொன்னவர். எதிர்காலம் பற்றிக் கனவுகண்டு, அதை அடைய வேண்டும் என்பது அவர் கனவாக இருந்தது. மாணவர்களோடு பேசுவதை மிகவும் விரும்பிய அவரைச் சந்தித்தால் மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா? வாருங்கள் அவரிடம் கேட்டிடலாம்; அறிவியலைக் கற்றிடலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. 'கனவு காணுங்கள்' என்பது அப்துல்கலாமின் பொன்மொழி. உங்கள் கனவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

வாணி : வணக்கம் ராணி உன் எதிர்காலக் கனவுகள் என்ன?

ராணி : வணக்கம் வாணி. நான் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை கவனமாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவேன். அதன்பின் மருத்துவத்துறைப் படிப்பைத் தேர்ந்தெடுத்து நன்கு படித்து தமிழ்நாட்டிலே சிறந்த மருத்துவராக வருவேன். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பொன்மொழிக்கேற்ப நோயில்லாமல் வாழ நல்ல மருத்துவம் செய்து சிறந்த முறையில் தொண்டுபுரிவேன். மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு என்று நினைத்து உதவி செய்வேன்.

வாணி : மிக்க நன்றி தோழி. உன் தொண்டினை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன்.

**2. நீங்கள் நேர்காணல் செய்ய விரும்பும் ஒருவரைக் குறிப்பிடுக. அவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களைப் பட்டியலிடுக.**

நான் நேர்க்காணல் செய்ய விரும்பும் ஒருவர். பாரதப் பிரதமர் அவர்கள். அவரிடம் கேட்க விரும்பும் வினாக்கள்:

* தற்போது நம் மக்கள் படும் துயரினை எவ்வாறு போக்க முயற்சி செய்துள்ளீர்கள்?
* தூய்மை இந்தியாத் திட்டத்திற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்துள்ளீர்கள்?
* நதிநீர் இணைப்புத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவீர்கள்?
* நீங்கள் ஏற்படுத்திய கல்விக் கொள்கைகளின் சிறப்பம்சங்கள் எவை? எவை?
* பசுமைப்புரட்சியை மேம்படுத்த என்ன திட்டங்களைத் தீட்டியுள்ளீர்கள்?

## ★ மதிப்பீடு ★

**1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

* உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்துள்ளோம்.
* தகவல் தொழில் நுட்பத்துறையில் நாம் அதிகப்படியான வளர்ச்சியினைப் பெற்றுள்ளோம்.
* எந்த வகையான செயற்கைக் கோள்களையும் ஏவும்திறம் நம்மிடம் உள்ளன.
* அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் நாம் முன்னிலை பெற்றுள்ளோம்.
* பாரம்பரிய மருத்துவ முறையிலும் நவீன மருத்துவ முறையிலும் நாம் வளர்ச்சி பெற்றுள்ளோம்.
* பாதுகாப்புத் துறையினை மேம்படுத்தும் நோக்கில் "அக்னி" மற்றும் "பிரித்வி" ஏவுகணைகளைச் செலுத்துவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

**2. தமக்குப் பெருமகிழ்சிவை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?**

* போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



✶ பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையைக் கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன.

✶ அதனால், அவர்கள் அணிந்து மகிழ்வினை நிகழ்ச்சிதான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது.

**3. நீங்கள் அப்துல்கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை ஒரு கடிதமாக எழுதுக.**

திருவில்லிபுத்தூர்,
09.08.20xx.

மேதகு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நலம், நலமறிய ஆவலாக உள்ளேன். தங்களின் அறிவியல் சாதனைகள் எனக்கு மிகவும் உதவுகின்றன. எனக்குள் எழுந்த சில ஐயங்களைக் கேட்க விழைகிறேன். அதற்குப் பதில் தாருங்கள்.

✶ இந்தியா வல்லரசாக என்ன செய்ய வேண்டும்.

✶ உலகிலேயே அதிக மழை பெய்யுமிடம் இந்தியாதான். ஆனால், சில ஊர்களில் தண்ணீர்ப்பஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. அதற்கு என்ன காரணமாக இருக்கலாம்?

✶ இயற்கை வளங்களைப் பெருக்குவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன?

✶ இந்தியா எல்லாவளங்களையும் கொண்ட நாடு. பிறகு ஏன் மற்ற நாடுகளையே எதிர்நோக்கியுள்ளோம்?

✶ மாணவர்கள் ஒழுக்கம், நாட்டுப்பற்று மற்றும் ஒருமைப்பாடுடன் வாழ்வதற்கு சில அறிவுரைகளைத் தாருங்கள்

நன்றி

இடம் : திருவில்லிபுத்தூர்.
நாள் : 09.08.20xx.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
இரா.முத்தமிழன்.

**<u>உறைமேல் முகவரி :</u>**

**பெறுநர்**

உயர்திரு. மேதகு ஏ. பி. ஜெ. அப்துல்கலாம் அவர்கள்,
முன்னால் குடியரசுத் தலைவர்,
புதுடில்லி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



கற்கண்டு

# இயல் மூன்று — மொழி முதல், இறுதி எழுத்துகள்

## மனவரைபடம்




## கற்பவை கற்றபின்

**ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் மொழிமுதல் எழுத்துகளாக அமைபவை எவை? அவ்வெழுத்துக்களைக் கொண்டு தொடங்கும் சொற்களை அகராதியைப் பார்த்து எழுதுக.**

✶ ஞ - ஞமலி, ஞாயிறு, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்

✶ ய - யவனர், யாது? யுகாதி, யூகம், யோகம், யௌவனம்

✶ வ - வளம், வாழ்க, விடை, வீடு, வெற்றி, வேர்
வைகை, வௌவால்

## ★ மதிப்பீடு ★

**1. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?**

✶ சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழி முதல் எழுத்துகள் என்பர்.

✶ உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.

✶ க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

✶ ‘ங’ - வரிசையில் ‘ங’ என்னும் ஓர் எழுத்து மட்டும் வரும்.

✶ ஞ - வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகள் மட்டும் வரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



- ✶ ய - வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகள் மட்டும் வரும்.
- ✶ வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை ஆகிய ஏழு எழுத்துகள் மட்டும் வரும்.

**2. மொழிக்கு இறுதியில் வாரா மெய்யெழுத்துக்கள் யாவை?**

- ✶ க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வாரா.

**3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து எது?**

- ✶ சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து ஆய்த எழுத்தாகும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. சொல்லின் இறுதியில் ________ தனித்து வருவதில்லை.
   **விடை: உயிரெழுத்துகள்**
2. ஆய்த எழுத்து சொல்லின் ________ வராது.
   **விடை : இறுதியிலும் முதலிலும்**
3. ________ பதினெட்டும் சொல்லின் முதலில் வராது.
   **விடை : மெய்யெழுத்துகள்**

**கண்டும் கேட்டும் மகிழ்க.**

அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய காணொலிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்க.

**பேசி வெளிப்படுத்துக.**

உங்களை ஓர் அறிவியல் அறிஞராகக் கற்பனை செய்து கொண்டு எவ்வகைக் கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவீர்கள் என்பது குறித்துப் பேசுக.

- ✶ இயற்கை வளங்களையும் மனித வாழ்வையும் மேம்படுத்த பல வழிகளைக் கண்டறிந்து எல்லா முயற்சிகளையும் எடுத்து வளம்பெறச் செய்வேன்.
- ✶ வாகன விபத்துகள் அதிகமாக இருப்பதால், அதைக் கட்டுப்படுத்த கருவி கண்டுபிடிப்பேன். அந்தக் கருவியை ஒவ்வொரு வாகனத்திலும் பொருத்தி, வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் தருணத்தில் அந்தக் கருவி செயல்பட்டு வண்டியின் செயல்பாட்டினை நிறுத்தும் வகையில் கண்டுபிடிப்பேன்.

## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

1921 ஆம் ஆண்டு மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்கவிடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் "தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர்தான் சர்.சி.வி. இராமன்.

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?
2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?
   அ) கடல்நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
   ஆ) கடல்நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
   இ) கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
   ஈ) கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது?
3. தேசிய அறிவியல் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?
4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

**விடை:**

1. சர். சி. வி இராமன்
2. (இ) கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
3. "தேசிய அறிவியல் நாள்" ஆண்டுதோறும் பிப்ரவரி 28ஆம் நாள் கொண்டாடி மகிழ்கிறோம். ஏனென்றால், சர்.சி.வி இராமன் தனது கண்டுபிடிப்பினை வெளியிட்ட நாள் என்பதால் கொண்டாடி மகிழ்கிறோம்.
4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு "இராமன் விளைவு"

---

**ஆசிரியர் கூறக்கேட்டு எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| ஈடுபாடு | பெருங்கடல் | தொழில்நுட்பம் | போலியோ |
| நுண்பொருள் | துருவப் பகுதி | நுண்ணுணர்வு | மூலக்கூறுகள் |
| உற்றவன் | குறிக்கோள் | | |

## கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக

### அறிவியல் ஆக்கங்கள்

**குறிப்புச் சட்டகங்கள் :**

முன்னுரை
விண்ணைத்தாண்டி
உள்ளங்கையில் உலகம்.
மருத்துவமும் பொறியியலும்.
முடிவுரை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



**முன்னுரை :**

இரவினைப் பகலாக்கும் மின்விளக்குகள். தானியங்கி மற்றும் நுண்ணுணர்வுக் கருவிகள் மூலம் தொழிற்சாலை உற்பத்தி போன்ற அனைத்தும் அறிவியலின் கொடைகளே ஆகும். கடலடியில் கட்டடம் கட்ட முயற்சி செய்வது முதல் விண்ணிற்கு ஏவும் செயற்கைக்கோள் வரை அனைத்தும் அறிவியலின் ஆக்கங்களேயாகும்.

**விண்ணைத்தாண்டி :**

நிலவினைக் காட்டி குழந்தைகளுக்கு சோறு ஊட்டும் காலங்கள் மாறி தற்போது நிலவிற்கே சென்றே சோறு ஊட்டும் காலம் நெருங்கிவிட்டது. விண்ணைத் தாண்டி விமானங்களும், ஏவூர்திகளும் செல்வது அறிவியலின் ஆக்கங்களேயாகும்.

**உள்ளங்கையில் உலகம் :**

நாம், திறன் பேசி மூலம் தொலைவில் உள்ள ஒருவரிடம் நேரடியாகப் பேசுவதைப் போல் பேசுகிறோம். இது மட்டுமில்லாமல் உலகில் ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வுகளை நம் உள்ளங்கையில் உள்ள திறன்பேசி மூலம் பார்த்து அறிந்து கொள்கிறோம். என்னே அறிவியலின் விந்தை!

**மருத்துவமும் பொறியியலும் :**

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் உயிர்காக்கும் மருந்துகள் அறிவியலின் ஆய்வுகளினால் நமக்குக் கிடைத்துள்ளன. செயற்கைக் கால்கள் வெறும் நானூறு கிராம் எடையில் உருவாக்கினார் நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள். அணுஉலை, சூரிய மின்சக்தி, பறக்கும் தொடர்வண்டிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் என அனைத்திலும் பொறியியல் பல சாதனைகளைக் கண்டுள்ளது.

**முடிவுரை :**

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" - என்று ஔவையார் கூறுவதைப் போல இன்று அறிவியல் உலகையே ஆள்கிறது. அறிவியலின் துணையின்றி எந்த ஒரு மனிதனும் இப்புவியில் இனி வாழமுடியாது. எனவே, அறிவியலையே போற்றுவோம் வளமாய் வாழ்வோம்.

## மொழியோடு விளையாடு

**பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்
2. காலிங்பெல்லை அழுத்தினான் கணியன்
3. மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க மிஷின் களைக் கண்டுபிடித்தனர்.
4. இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| கம்ப்யூட்டர் | - | கணிப்பொறி, கணினி |
| காலிங்பெல்லை | - | அழைப்பு மணியை |
| மிஷின் | - | இயந்திரம் |
| ரோபோ | - | எந்திரமனிதன் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



**பகிர்க**

ரோபோக்கள் கண்டுபிடிப்பினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவாதிக்க.

✶ பலகோடி மக்கள் வேலை வாய்ப்பை இழந்து வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடும்.

✶ பல தவறுகள் ஏற்பட வாய்ப்புகளும் உண்டு.

✶ எந்திர மனிதனை மருத்துவத்துறைக்குப் பயன்படுத்தினால் தவறுகள் ஏற்படும் நிலை உள்ளது. உயிர்ப்பலி கூட ஏற்பட்டுவிடும்.

✶ எந்திர மனிதனை தவறான செயல்களுக்குப் பயன்படுத்தினால் உலக உயிர்களுக்கு பேராபத்து ஏற்பட்டுவிடும்.

✶ எந்திர மனிதனால் நன்மைகள் ஏற்பட்டாலும் திடக்கழிவு அதிகமாக ஏற்பட்டு சில பின்விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

---

**கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக**

1.

| | | | | |
|---|---|---|---|---|
| வி | ண் | க | ல | (ம்) |

2.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ரு | த் | (து) | வ | ம் |

3.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | றி | வி | ய | (ல்) |

4.

| | | |
|---|---|---|
| (க) | ணி | னி |

5.

| | | | |
|---|---|---|---|
| எ | ல் | (லா) | ம் |

6.

| | | | |
|---|---|---|---|
| அ | ழை | (ப்) | பு |

---

**வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (து) | (ல்) | (க) | (லா) | (ப்) | (ம்) |

**எழுத்துகளை வரிசைப்படுத்தி தமிழக அறிவியல் அறிஞரைக் கண்பிடியுங்கள்:**

விடை : அப்துல்கலாம்

---

## வாக்கியத்தை நீட்டி எழுதுக

(எ.கா) நான் படிப்பேன். (அறிவியல், பாடம், நன்றாக)

நான் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் நன்றாகப் படிப்பேன்.

1. அறிந்து கொள்ள விரும்பு (எதையும், காரணத்துடன், தெளிவாக)
2. நான் சென்றேன் (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)

1. எதையும் அறிந்து கொள்ள விரும்பு
   எதையும் காரணத்துடன் அறிந்து கொள்ள விரும்பு
   எதையும் காரணத்துடன் தெளிவாக அறிந்து கொள்ள விரும்பு
2. நான் ஊருக்குச் சென்றேன்
   நான் நேற்று ஊருக்குச் சென்றேன்
   நான் நேற்று பேருந்தில் ஊருக்குச் சென்றேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in




## அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக

(எ.கா) அறி - அறிக, அறிந்து, அறிஞர், அறிவியல், அறிவிப்பு

1. பார் - பார்த்தல், பார்ப்பு, பார்க்க, பார்த்தார், பார்வை
2. செய் - செய்க, செய்தல், செய்து, செய்யா, செய்தன, செய்த
3. தெளி - தெளிக, தெளிதல், தெளிந்து, தெளித்த, தெளிக்கும்
4. படி - படிக்க, படித்தல், படித்து, படித்த , படிப்பான்

## மெய் எழுத்து நடுவில் அமையுமாறு சொற்களை உருவாக்கு

✶ வம்பு
✶ நம்பு
✶ தம்பி
✶ கம்பி
✶ நம்பி




## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க் | னி | ச் | சி | ற | கு | க | ள் | |
| டி | | | | | | | | | |
| மை | | | | | | | கி | | |
| | | வு | ம் | ஆ | | | ங் | | |
| னி | | | | த் | | | ய | | |
| க் | | எ | ந் | தி | ர | ம | னி | த | ன் |
| அ | | | | சூ | | | தா | | |
| | வி | | | டி | ட் | போ | | | சோ |
| ம் | த | ட | ஔ | | | | | | பி |
| | ப | | ச | வு | தி | அ | ரே | பி | யா |

**சூழலைக் கையாள்க**

விடை : அருகில் உள்ளவரிடம் தொலைபேசி வாங்கி வீட்டிற்குத் தகவல் தருவேன்

## நிற்க அதற்குத்தக

என் பொறுப்புகள் ...

அறிவியல் கருவிகளை நன்மைக்கு மட்டும் பயன்படுத்துவேன்

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| செயற்கை நுண்ணறிவு | – | Artificial Intelligence |
| மீத்திறன் கணினி | – | Super Computer |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| செயற்கைக் கோள் | – | Satellite |
| நுண்ணறிவு | – | Intelligence |

## இணையத்தில் காண்க

பலவகை எந்திர மனிதர்களின் படங்களை இணையத்தில் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

## பின்வரும் விடுப்பு விண்ணபத்தை நிறைவு செய்க

**அனுப்புநர்**

இரா. சரவணன்
ஆறாம் வகுப்பு ‘அ’ பிரிவு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருவில்லிபுத்தூர்.

**பெறுநர்**

வகுப்பாசிரியர் அவர்கள்,
ஆறாம் வகுப்பு ‘அ’ பிரிவு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருவில்லிபுத்தூர்.

**ஐயா,**

வணக்கம், எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எனக்கு 09.08.2022 மற்றும் 10.08.2022 ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள
மாணவன்,
இரா. சரவணன்

இடம் : திருவில்லிபுத்தூர்.
நாள் : 08.08.2022.

பெற்றோர் கையொப்பம்
மா. இராமன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் 3

## அலகுத்தேர்வு-1

### (கவிதைப் பேழை)

**மொத்த மதிப்பெண்கள் - 25**

**I. நிரப்புக** **5 x 1 = 5**

1. உடல் நோய்க்கு ________ தேவை
2. 'ஆழ்கடல்' என்னும் சொல்லைப் பிரித்தால் ________ கிடைக்கும்.
3. இல்லாது + இயங்கும் = ________
4. நண்பர்களுடன் ________ விளையாடு
5. ஔடதம் = ஆம் = ________

**II. பொருத்துக (எதிர்ச்சொல்)** **1 x 2 = 2**

6. அணுகு - (அ) தெளிவு
7. ஐயம் - (ஆ) சோர்வு
8. ஊக்கம் - (இ) பொய்மை
9. உண்மை - (ஈ) விலகு

**III. நயம் கூறுக** **1 x 2 = 3**

10. "நாளை மனிதன் கோள்களில் எல்லாம்
நகரம் அழைத்து வாழ்ந்திடுவான்
வேளை தோறும் பயணம் செய்ய
விண்வெளிப் பாதை அமைத்திடுவான்"

**IV. குறு வினா** **3 x 2 = 6**

11. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
12. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
13. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

**V. சிறுவினா** **2 x 4 = 8**

14. அறிவியல் ஆத்திசூடி பகுதியின் பாடல் கருத்துகளை உன் சொந்த நடையில் எழுதுக.
15. இன்றைய மனிதனின் கனவுகளை நாளை நாம் நனவாக்குவோம் என்ற கருத்தை வெளிப்படுத்தும் அறிவியலால் ஆள்வோம் பாடலின் கருத்துகளை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் 3

## அலகுத்தேர்வு-2

### (உரைநடை உலகம், விரிவானம்)

**மொத்த மதிப்பெண்கள் - 25**

**I. நிரப்புக** **7 x 1 = 7**

1. ரோபோ என்னும் சொல்லுக்கு _______ என்பது பொருள்
2. 'சோபியா' ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு _______
3. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ________
4. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் _______
5. செயல் + இழக்க = _______
6. அவ்வுருவம் என்னும் சொல்லைப் பிரித்தால் _______ கிடைக்கும்
7. தானே இயங்கும் இயந்திரம் _______

**II. சொற்றொடரில் அமை** **2 x 1 = 2**

8. (அ) உற்பத்தி (ஆ) நுண்ணறிவு

**III. குறு வினா** **2 x 2 = 4**

9. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?
10. "டீப் புளூ - மீத்திறன் கணினி பற்றி எழுதுக.

**IV. சிறுவினா** **1 x 4 = 4**

11. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக

**V. விடையளி** **2 x 4 = 8**

12. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகரமாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
13. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612350 www.CBSEtips.in



# இயல் 3

## அலகுத்தேர்வு-3

**(கற்கண்டு, மொழி ஆள்வோம், மொழியோடு விளையாடு)**

**மொத்த மதிப்பெண்கள் - 25**

**I. நிரப்புக** **3 x 1 = 3**

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் ________ .
2. உயிர் எழுத்துகள் __________ சொல்லின் முதலில் வரும்.
3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து _________

**II. குறு வினா** **2 x 2 = 4**

4. மொழி இறுதியில் வராத மெய்கள் என்னென்ன?
5. சொல்லின் இடையில் வரும் எழுத்துகளைக் கூறுக.

**III. சிறுவினா** **1 x 4 = 4**

6. மொழி முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?

**IV. கட்டுரை** **1 x 6 = 6**

7. விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

**V. மொழிப்பயிற்சி** **2 x ½ = 1**

**8. கலைச்சொல் எழுதுக:**

(அ) Planet (ஆ) Super Computer

**9. வாக்கியத்தை நீட்டி எழுதுக** **(2)**

நான் சென்றேன் (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)

**10. அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக. (நான்கு சொற்கள்)** **(2)**

படி

**11. கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக** **(1)**

(அ) விகண்லம் (ஆ) அப்மைபு

**12. சொல்வளம் பெருக்குக.**

(அ) மிஷின் (ஆ) காலிங்பெல்லை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

### ஆர்டர்கள் தொடர்புக்கு

**8925612359 - 8643007972**
**7010414574 - 8248737898**



## பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898

penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

விலை: 219